வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 06.11.2023 திங்கட்கிழமை | இதழ் : 330 | பக்கங்கள் : 16

### மட்டு. மேய்ச்சல் தரை விவகாரம்:

## சித்தாண்டியில் ஆர்ப்பாட்டம் செய்த 6 யாழ். பல்கலை மாணவர்கள் கைது!

மட்டக்களப்பு, நவ. 06

மட்டக்களப்பு சித்தாண்டியில் மேய்ச்சல் தரை பண்ணையாளர்கள் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 6 பல்கலைக்கழக மாணவர்களை, பொது போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் கீழ் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளதாக

11



## கைதான மாணவர்களுக்குப் பிணை ஆயினும் அவர்கள் சிறைச்சாலையில்

மட்டக்களப்பு, நவ. 06

மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரை மீதான சிங்கள ஆக்கிரமிப்பை உடன் நிறுத்தக் கோரி போராட்டத்தில் ஈடுபட்டபோது, கைதுசெய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் 6 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

எனினும், நேற்று மாலைக்குள் பிணை நிபந்தனைகளை பூர்த்தி செய்யமுடியாததால் மாணவர்கள் இன்று காலை வரை மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

போராட்டம்

11





## வடக்கு மக்களுக்கு சீன உதவியில் வீடு!

### வவுனியாவில் அறிவித்தார் அந்நாட்டு தூதுவர்

வவுனியா, நவம்பர் 06

**வடமாகாண மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக இலங்கைக்கான சீனத்தூதுவர் ஷீ சென் ஹொங் தெரிவித்துள்ளார்.**

**வவுனியா மாவட்ட செயலகத்திற்கு நேற்று பயணித்திருந்த நிலையிலேயே அவர் இதனைக் கூறினார்.**

இலங்கையில் உள்ள மக்கள் எவ்வாறான பிரச்னைகளை எதிர் நோக்கினாலும் அதற்கு தீர்வு காணும் வகையில் சீனா அரசாங்கம் கடந்த காலத்திலும், தற்காலத்திலும் செயற்படுவதுடன், எதிர்காலத்திலும் அதற்காக செயற்படும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இலங்கை அரசாங்கம் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு சீனா தொடர்ந்தும் உதவிகளை வழங்கி வருவதாக

11

## ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ் தரப்பில் பொதுவேட்பாளர்

### ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் பேசுவதற்கு கூட்டமைப்பு முடிவு!

மன்னார், நவ. 06

ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழர் தரப்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது எனவும், அதற்கு ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஆதரவைக் கோருவது எனவும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி (டி.ரி.என்.ஏ.) தீர்மானித்துள்ளது.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் நேற்று மன்னாரில் நடைபெற்ற போதே இவ்வாறு தீர்மானிக்கப்

11

# ஜனவரி 21 இல் தமிழரசுக் கட்சி நிர்வாகத் தெரிவு திருமலையில்!

### அதற்காக விசேட பொதுக்குழு அன்றைய தினம் கூடும்





வவுனியா, நவம்பர் 06

**இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அடுத்த 17 ஆவது தேசிய மாநாடு நான்கரை வருடங்களின் பின்னர் வரும் ஜனவரி 28ஆம் திகதி திருகோணமலையில் நடைபெறவுள்ளது. எனினும், அதற்கு முன்னோட்டமாகக் கட்சியின் தலைவர் உட்பட புதிய நிர்வாகிகளைத் தேர்வு செய்வதற்காக ஜனவரி 21ஆம் திகதி கட்சியின் பொதுக்குழு விசேடமாகத் திருகோணமலையில் கூடும்.**

நேற்று முற்பகல் வவுனியாவில் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் நடைபெற்ற கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று அறியவந்தது.

கட்சியின் அடுத்த மத்திய செயற்குழுக் கூட்டம் வரும் ஜனவரி 20ஆம்

11

## நில ஆக்கிரமிப்புக்கு எதிராக தமிழரசுக் கட்சி போராட்டம்

### வவுனியாவில் நேற்று நடத்தப்பட்டது



வவுனியா, நவ. 06

வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் மீது முன்னெடுக்கப்பட்டு வரும் அடக்குமுறைகளுக்கு எதிராக தமிழரசுக் கட்சியினரால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டம் வவுனியா பழைய பஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்று காலை முன்னெடுக்கப்பட்டது.

“வடக்கு - கிழக்கில் நில அபகரிப்புக்கள் நிறுத்தப்பட வேண்டும், மயிலத்தமடுமேச்சல் தரையில் ஏற்படுத் தப்பட்டுள்ள சட்டவிரோத குடியேற்றங்களை உடனே நிறுத்தவேண்டும்,

11

## அரச ஊழியர்களுக்கு ரூ.10,000!

கொழும்பு, நவ. 06

2024ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு 10,000 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்படவுள்ளதாக அரசின் தகவல் அறியும் வட்டாரங்களில் அறியமுடிகிறது.

அதன்படி எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் சுமார் 15 இலட்சம் அரசு ஊழியர்கள் சம்பள உயர்வை பெறுவார்கள்.

11

## நில அபகரிப்புகளை எதிர்த்து எமது போராட்டம் தொடரும்!

### வவுனியாவில் தெரிவித்தார் மாவை

வவுனியா, நவ. 06

“வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதற்கு எதிராகத் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின்

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது

இந்தப் பத்தியில் இதற்கு முன்னரும் பலதடவை அவரைப்பற்றி குறிப்பிட்டிருக்கின்றேன்.

கனடாவில் வாழும் நமது மூத்த பத்திரிகையாளர் திரு என்று நண்பர்களால் அறியப்பட்ட எஸ். திருச் செல்வம். கனடாவில் குடியேறி மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக அங்கே வாழ்ந்துவருபவர்.

தமிழர் தகவல் என்ற பெயரில் கடந்த 33 ஆண்டுகளாக பத்திரிகையை வெளியிட்டு வருபவர். அதிலும் ஒரு சிறப்பு, பிரதி மாதமும் தவறாது ஒவ்வொரு மாதமும் ஐந்தாம் திகதி அவரது அந்த மாதாந்த பத்திரிகையை வெளியிட்டு விடுவதுதான்.

மாதம்தோறும் 36 பக்கங்களில் பயனுள்ள பல கட்டுரைகளுடன் அந்த பத்திரிகை வெளிவந்து கொண்டிருக்கின்றது.

நேற்றைய தினம் இந்த மாதத்திற்கான பத்திரிகை மின் அஞ்சலில் வந்ததும் திறந்து பார்த்தபோது அதன் ஆசிரியத் தலையங்கம் இந்த ஊர்க்குருவியின் கவனத்தை பெற்றது.

அந்த ஆசிரியத் தலையங்கத்தையே இன்றைய பத்தியில் முழுமையாகத்தருவது பயனுள்ளது என்று கருதுவதால் அதனை இங்கே தருகிறேன்.

'தமிழர் தாயகத்தல் வாழும் பெரும்பாலானவர்கள் அங்கிருந்து வெளியேறி வருவது தொடர்பான செய்திகளும் தகவல்களும் தினமும் வந்து கொண்டிருக்கின்றன.

புலம்பெயர்வதற்காக விமானப் பயணத்தை எதிர்பார்த்திருப்பவர்கள் ஒருபுறம். பலகோடி ரூபாக்களை ஏஜென்சிக்காரர்களிடம் கொடுத்து ஏமாந்து கொண்டிருப்பவர்கள் இன்னொரு புறம்.

வெளிநாடுகளிலுள்ள தங்கள் உறவுகளுடன் தொடர்பு கொள்பவர்கள் பலரும் பயணத்துக்கான நிதியுதவியைக் கேட்பவர்களாகக் காணப்படுகின்றனர்.

சில மாதங்களுக்கு முன்னர் கனடாவுக்கு வருகை தந்திருந்த 'டான் தொலைக்காட்சி நிறுவன அதிபர் திரு. எஸ்.எஸ். குகநாதன் இங்கு பங்குபற்றிய நிகழ்ச்சிகளில் இந்த நிலைமையை படம் காட்டுவது போன்று விபரித்தார்.

சில அரசியல் பிரமுகர்களும் இவ்விடயத்தை அவ்வப்போது வெளிப்படுத்தி இருகின்றனர். இவர்களுக்குள்ள அங்கலாய்ப்பு, இந்நிலை தொடருமானால் தமிழர் பிரதேச பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்துவிடுமென்பதே.

எம்மவர் வெளியேற்றம் இதே வீச்சில் தொடருமானால் எதிர்காலத்தில் தமிழ் மண் வெறுமையாகிவிடும். அப்போது சிங்களக் குடியேற்றம், விகாரைகள் நிர்மாணம், இராணுவ மயமாக்கல் என்பவை இலகுவாகிவிடும்.

இதனை எவரும் புரியும் மொழியில் கடந்த மாதம் கனடா வருகை தந்த யாழ்ப்பாண கத்தோலிக்க மறைமாவட்ட தொடர்பாடல் நிலைய அதிபரான வணபிதா அன்ரன் ஸ் ரீபன் அவர்கள் தெரியப்படுத்தினார்.

இதற்கு அவர் பயன்படுத்திய அதியுச்ச அர்த்தமுள்ள சொல்லாடல் 'வெறுமை' என்பது.

எங்கள் மக்கள் இன்று வெறுமை நிலைக்குள் வாழ்ந்து வருகிறார்கள் என்று சுட்டிய வண.பிதா அங்கு இப்போது 'தலைமைத்துவ வெறுமை' யும் ஏற்பட்டுள்ளதென்று அழுத்திக் கூறினார்.

வெறுமை என்பதற்கான ஆங்கிலப் பதம் Emptiness என்பது. வெறுமையை சூனியம் என்றும் சொல்லலாம். தமிழர் தாயகம் சூனியப் பிரதேசமாக இன்று இருக்கிறதென்றால் வறுமை, வருமானமின்மை, பொருளாதாரப் பிரச்னை, அச்சச் சூழல் என்று பல காரணங்கள் உண்டு. இவையெல்லாம் அங்குள்ளன என்பதையே வணபிதா அவர்கள் 'வெறுமை' என்ற பதத்துக்குள் அடக்கிக் கொண்டார்.

இந்நிலையை மாற்றுவதற்குரிய தலைவர்கள் அங்கில்லை என்பதை 'தலைமைத்துவ வெறுமை'யும் உள்ளது என்று அவர் குறிப்பிட நேர்ந்தது.

எத்தனை பேருக்கு இதன் ஆழமும் நீளமும் புரியப் போகிறது?

புரியாதவர்களுக்குப் புரிய வைக்க தலைவர்களும் இல்லை என்றால்....

வெறுமையே நீட்சி பெறும்.'

இதுவே தமிழர் தகவல் ஆசிரியரின் கவலை தோய்ந்த வரிகள்.

அண்மையில் நமது மூத்த அரசியல்வாதியும், மூத்த சட்டத்தரணியுமான என். சிறிகாந்தா அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தபோது, இந்த ஊர்க்குருவி, நமது தலைவர்கள் என்று எதையோ சொல்லத் தொடங்கியபோது, இடைமறித்த அவர், 'எங்கே தம்பி நம்மத்தியில் தலைவர்கள் இருக்கிறார்கள்?' என்று கேட்டது ஞாபகம் வருகின்றது.

இவையெல்லாம் இப்படிப் படித்துவிட்டு நகர்ந்து செல்லக்கூடிய விடயங்கள் அல்ல. இந்த சமூகத்தை நேசிக்கின்ற ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டியவை.!

-ஊர்க்குருவி.

# நாட்டில் 23 வீதமானோர் நீரிழிவால் பாதிப்பு

கொழும்பு, நவ. 06

நாட்டில் 23 சதவீதமானோர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை உட்சுரப்பியல் நிபுணர்கள் கல்லூரியினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

இது நீரிழிவு நோயினால் ஆபத்தில் உள்ள உலகின் முதல் 10 நாடுகளுக்குள் உள்ளதாக அந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்தநிலையில் நீரிழிவு நோய்த் தொடர்பில், கருத்து தெரிவித்த கொழும்பு பல்கலைக் கழகத்தின் மருத்துவத் துறை பேராசிரியர் வைத்தியர் பிரசாத் கட்டுலந்த, நீரிழிவு நோய் காரணமாக இலங்கையில் பலர் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

2006 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், இலங்கையின் சனத்தொகையில் 10 சதவீதமானோர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டது.

அத்துடன் கொழும்பு மாவட்டத்திலேயே அதிகமான நீரிழிவு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக கொழும்பு பல்கலைக் கழகத்தின் மருத்துவ துறை பேராசிரியர் வைத்தியர் பிரசாத் கட்டுலந்த தெரிவித்துள்ளார்.

(அ)

# யாழில் 1,050 பேருக்கு கண்புரை சத்திர சிகிச்சை

யாழ்ப்பாணம், நவ. 06

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஆயிரத்து 50 பேருக்கு கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்தில் உள்ள பல வைத்தியசாலைகளில் கடந்த 5 நாட்களாக கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளின் கண் சத்திர சிகிச்சை நிபுணர்களின் உதவியுடன் இந்த சத்திர சிகிச்சைகள் முன்னெடுக்கப்பட்டதாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

(அ)

# ஆணைக்குழுக்கள் அமைத்து தேர்தல்களை பிற்போடுவதுதான் அரசாங்கத்தின் நோக்கம்

## கடுமையாக சாடும் எதிர்க்கட்சிகள்

கொழும்பு, நவ. 06

ஆணைக்குழுக்களை அமைத்து அதன் ஊடாக தேர் தல்களை பிற்போடுவதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் அடிப்படை நோக்கமாக வுள்ளது என்று எதிர்க் கட்சிகள் கடுமையாக சாடியுள்ளன.

நடைமுறை தேவைகளுக்கேற்ப தேர்தல் சட்டங்களைத் திருத்துவதற்கும் அரசியல் கட்சிகளின் ஒழுக்கத்தைப் பேணுவ தற்கும் தேவையான பரிந்துரைகளை வழங்குவதற்குமாக ஓய்வு பெற்ற பிரதம நீதியரசர் மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி வெவகே பிரியசாத் ஜெரார்ட் டெப் தலைமையில் பத்துபேர் கொண்ட புதிய ஆணைக்குழுவொன்றை ஜனாதிபதி ரணில் விக்கிமரசிங்க நியமித்துள்ளமை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி, இலங்கை தமிழரசுக்கட்சி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகியன கருத்து வெளியிடும்போதே மேற் கண்டவாறு தெரிவித்துள்ளன. அக்கட்சிகள் தெரிவித்துள்ள கருத்துக்கள் வருமாறு:

**ஐக்கிய மக்கள் சக்தி**

ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிக்கையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமை யிலான அரசாங்கம் தமக்குள்ள அதிகாரங்களுக்கு அமைவாக ஆணைக்குழுக் களை நியமிக்க முடியும். ஆனால் அந்த ஆணைக் குழுக்கள் தேர்தலை நடத்துவதற்குரிய முனைப் புக்களை கொண்டதாக காணப்பட வில்லை.

ஏற்கனவே, மாகாண சபைகளுக்கான தேர்தல் ஐந்து வருடங்களுக்கும் அதிகமான காலமாக நடத்தப்படாதுள்ளது. உள்ளூராட்சி மன்றங்க ளுக்கான தேர் தலுக்கு அனைத்து ஏற்பாடுளும் நிறைவுபெற்றபோதும் அத்தேர்தலும் நடத்தப் படாதுள்ளது. குறிப்பாக நீதித்துறை தேர்தலை நடத்துமாறு அறிவித்தும் நிதி அமைச்சு அதற் கான நிதியை விடுக்காமையினால் தேர்தலை நடத்த முடிந்திருக்கவில்லை.

இவ்வாறான நிலையில், தற்போது தேர்தலை நடத்தாது காலத்தைக் கடத்துவதற்காகவே ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படுகின்றன. தேர்தல் நடத்தாத நாட்டில் ஆணைக்குழுக் களை நியமிப்பதால் என்ன நன்மை ஏற்படப் போகின்றது என்றார்.

**இலங்கை தமிழரசுக்கட்சி**

இலங்கை தமிழரசுக்கட்சி யின் பேச்சாளரும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் கூறு கையில், மாகா ணங்களுக்கான தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக் குழுவில் இணக்கப்பாடு எட்டப்பட்டது.

அந்த இணக்கப்பாட்டின் அடிப்படையில் பழைய முறை யில் தேர்தல் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது. அதற்காக என்னால் தனிநபர் பிரேரஷணையொன்றும் சமர்ப்பிக்கப் பட்டது. ஆனால் தற்போது வரையில் அந்த பிரேரணையை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் விருப்புக்களைத் தெரிவிக்கவில்லை.

ஆகவே, தேர்தல்களுக்கான முறைமைகளை சீர்செய்வதாக அரசாங்கம் கூறி ஆணைக்குழுக் களை அமைப்பதானது, தேர்தல் நடத்தாது காலத் தினை கடத்து வதற்காகவே ஆகும். உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலையும் அரசாங்கம் நடத்துவதற்கு தயாராக இல்லை.

எனவே, அரசாங்கம் தேர்தல்களுக்கான முறைமைகளை சீர்திருத்துவதற்கு முன்னதாக, மாகாண மற்றும் உள்ளூராட்சி மன்றக் கட்ட மைப்புக்களுக்கான தேர்தலை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும் என்றார்.

**தேசிய மக்கள் சக்தி**

தேசிய மக்கள் சக்தியின் பிரசார செயலாளரும், கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரு மான விஜித ஹேரத் தெரிவிக்கையில், அரசாங்கத் தினைப் பொறுத்தவரையில் மக்களின் ஜனநாயக உரிமைகளை நிலை நாட்டுவதில் கரிசனைகள் இல்லை. தேர்தல்களில் தமக்குச் சாதகமான நிலைமைகளை உரு வாக்கி அதில் வெற்றி பெறுவதே நோக்கமாக காணப்படுகின்றது.

அந்தப் பின்னணியில் தான் தற்போதைய சூழல் தமக்கு சத கமில்லை என்று கருதுகின்ற அரசாங்கம் தேர்தலை பிற்போ டுவதற்கு அல்லது ஏதோவொரு வகையில் காலம் தாழ்த்துவ தற்கு திட்டமிடுகின்றது. அந்த வகையில் தேர்தலை பிற்போடு வதை அடிப்படை நோக்கமா கக் கொண்டே தற்போது ஆணைக்குழுக்களை அறிவித்து வருகின்றது - என்றார்.

(அ)

**யாழ்.நகரில் காணி உடன் விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3½ பரப்புக் காணி, இரண்டு வெட்டுக் கிணறுகளுடன் உடன் விற்பனைக்குண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் - கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது. 55 மில்லியனுக்கு (5 கோடியே 50 லட்சம்) மேலான விலை எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு : +447963743585 (Whatapp), 0212227141(Sri Lanka)

மின்னஞ்சல் : Jamesraj_uk@yahoo.co.uk

ஈழநாடு
Eelanadu
06.11.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், ஐப்பசி 20

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# தமிழசு கட்சியின் சமஷ்டித் தீர்வு?

சமஷ்டி அடிப்படையிலான ஒரு தீர்வை - நேர்மையாக முன்னெடுத்து வரும் ஒரேயொரு கட்சி, தமிழரசு கட்சி மாத்திரமே என - தமிழரசு கட்சியின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்திருக்கின்றார். இலங்கை தமிழரசு கட்சியின் பிறிதொரு பெயர் - சமஷ்டிக் கட்சி. 1949இல், ஆரம்பிக்கப்பட்ட இலங்கை தமிழரசு கட்சி - ஆங்கிலப் பெயராக சமஷ்டிக் கட்சியென்றே அடையாளப்படுத்தப்பட்டது. இந்த அடிப்படையில் நோக்குவதாயின், சமஷ்டி அடிப்படையிலான தீர்வை அடைவதுதான் தமிழரசு கட்சியின் இலக்காக முன்வைப்பட்டது.

ஆனால் கட்சியை ஸ்தாபித்த எஸ்.ஜே.வி.செல்வநாயகம், சமஷ்டியை முன்வைத்தாலும் கூட, மறுபுறம் சாத்தியமான அரசியல் தீர்வொன்றை பெறுவதிலேயே கவனம் செலுத்தியிருந்தார். இந்த அடிப்படையில்தான், 1957 பண்டா - செல்வா மற்றும், 1965 டட்லி - செல்வா உடன்பாடுகளின் போது - சமஷ்டி பற்றி செல்வநாயகம் பேசவில்லை. குறைவான அதிகாரங்களை பெறுவதற்கான முயற்சியாகவே மேற்படி உடன்பாடுகளை வெற்றிகொள்ள முயற்சித்தார். ஏனெனில் செல்வநாயகம் சமஷ்டி பற்றி பேசிய போதிலும், அதனை அடையும் வழிமுறையை அவர் அறிந்திருக்கவில்லை. பின்னர் 1977இல் வட்டுக் கோட்டை தீர்மானத்தை நிறைவேற்றிய போதும், தனிநாட்டை அடையும் வழிமுறையை தமிழர் விடுதலைக் கூட்டணி அறிந்திருக்கவில்லை.

இந்த நிலையில் தமிழரசு கட்சி மட்டும்தான் சமஷ்டி அடிப்படையிலான ஒரு அரசியல் தீர்வில் நேர்மையாக இருக்கின்றது என்று இன்றைய சூழலில் கூறுவதானது, அடிப்படையிலேயே தவறானது. சமஸ்டியை எவரும் உச்சரிக்கலாம் ஆனால் அவ்வாறானதொரு அரசியல் தீர்வை அடைவதற்கு கட்சியிடமுள்ள வழிமுறை என்ன - கடந்த முக்கால் நூற்றாண்டு கால தமிழரசு கட்சியின் - பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வரலாற்றில் ஏன் அவ்வாறானதொரு தீர்வை அடைய முடியாமல் போனது?

கட்சி தீர்வு விடயத்தில் நேர்மையாக இருந்திருக்கின்றது என்றால் - ஏன் அந்த நேர்மையான செயல்பாடுகள் வெற்றியளிக்கவில்லை? கடந்த காலத்தில் அடைய முடியாமல் போன ஒரு விடயத்தின் மீது, நேர்மையாக இருக்கின்றோம் என்பதன் பொருள் என்ன? ஒரு விடயத்திற்கு நேர்மையாக இருக்கின்றோம் என்று கூறுவதன் மூலம் மட்டும் - அதனை அடைந்துவிட முடியுமா?

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் - அவரது தலைமையின் மீது அர்ப்பணிப்பும் விசுவாசமும் கொண்டிருந்தவர்கள் அனைவரும் அவர்களது நிலைப்பாட்டிற்கு நேர்மையாக இருந்தவர்கள்தான். அதனால்தான், அவர்கள் மரணம் வரையில் களம் கண்டார்கள். தனிநாட்டின் மீதான அவர்களது நேர்மையை எவரும் கேள்விக்குள்ளாக்க முடியாது - ஆனால் அந்த நேர்மை அவர்களுக்கு வெற்றியை பெற்றுக் கொடுத்ததா? நேர்மையாக இருப்பதன் மூலம் மட்டும் ஒரு விடயத்தை அடைய முடியுமென்றால் விடுதலைப் புலிகள் இயக்கத்தை விடவும் எவரும் நேர்மையாக இருக்கவும் இல்லை - தங்களது நிலைப்பாட்டுக்காக எந்த எல்லைக்கும் போகக் கூடிய மனோநிலையில் இருக்கவுமில்லை.

எனவே இங்கு விடயம் ஒரு கட்சி - ஓர் அரசியல்வாதி எதனை கூறுகின்றார் - அவர் கூறுகின்ற விடயத்திற்கு அவர் எந்தளவு நேர்மையாக இருக்கின்றார் என்பதல்ல. தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் தோல்விதான் - இயக்கங்களை பிரசவித்தது. அனைத்து இயக்கங்களும் தனிநாட்டுக்கான நிலைப்பாட்டிற்கு நேர்மையாகவே இருந்தனர். மிதவாதிகளிடம் இல்லாத நேர்மையும் அர்பணிப்பும் அவர்களிடமிருந்தது - ஆனால் அந்த நேர்மையும் - அர்பணிப்பும் அவர்களை வெற்றிப் பாதையில் நகர்த்தவில்லை.

இப்போது விடயம் நேர்மை பற்றிதயல்ல - மாறாக, சூழ்நிலைகளை புரிந்து கொண்டு, அதற்கேற்ப விடயங்களை கையாண்டு - ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் எதைப் பெறலாம் - எதைப் பெறமுடியாது - என்னும் அடிப்படையில் சிந்திப்பதும், அதற்கேற்ப செயற்படுவதும்தான் விமோசனத்தை தரும். அவ்வாறு சிந்திக்கவும் செயறலாற்றவும் கூடிய ஆளுமையுள்ள அரசியல்வாதிகளே தமிழ் மக்களுக்குத் தேவை.

## வடமாகாண மரநடுகை மாதம்

**கார்த்திகை - 2023**

*“ஒரு மரம் பட்டுப்போகுமாக இருந்தால் பட்ட அந்த மரத்துக்குப் பதிலாக அவ்விடத்தில் இன்னொரு மரத்தை நாட்டுங்கள்.”*

**- கரோலஸ் இலினேயஸ் (தாவர வகைப்பாட்டியலாளர்)**



# வட மாகாணத்தில் 401 புதிய அதிபர்கள் நியமனம்

*யாழ்ப்பாணம், நவ. 06*

*அதிபர் தரத்துக்கு ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 401 புதிய அதிபர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று முன்தினம் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் வைத்து வழங்கப்பட்டன.*

*வடக்க மாகாணத்தில் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களுக்கே இவர்கள் அதிபர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.*

*வடக்கு மாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் அதன் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர்க்குதிருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு நியமனக் கடிதங்களை வழங்கினர்.*





*வழங்கப்பட்ட புதிய நியமனங்களுடன் வட மாகாண பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்கள் நிரப்பப்படும் என வட மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.*

*(அ)*

# ஆண்டின் இறுதிக்குள் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கான வரைவு

## அமைச்சர் அலி சப்ரி அறிவிப்பு

*கொழும்பு, நவ. 06*

*இந்த ஆண்டின் இறுதிக்குள் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கான இறுதி வரைவினை வெளியிடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.*

*இதுதொடர்பில் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவிக்கையில்,*

*நாட்டில் இனங்களுக்கு இடையிலான புரிதல்களை ஏற்படுத்தி நீண்டகாலமாக காணப்படுகின்ற முரண்பாடுகளை முடிவுக்கு கொண்டுவருவதில் அரசாங்கம் என்ற வகையில் முன்னெடுப்புக்களைச் செய்து வருகின்றது.*

*அந்த வகையில் தான் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினை ஸ்தாபிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.*

*இதன்ஊடாக இனங்களுக்கு இடையிலான முரண்பாடுகளை முடிவுக்கு கொண்டுவருவதும், பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுப்பதும் இலக்காக உள்ளது.*

*அந்த வகையில் குறித்த ஆணைக்குழுவினை ஸ்தா*




*பிப்பதற்கான நடவடிக்கைகளின் தற்போது அதற்கான வரைவு தயாரிக்கப்படும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.*

*அந்த வரைவினை இறுதிசெய்து இந்த ஆண்டு இறுதிக்குள் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்- என்றார்.*

*(அ)*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
அரசு காரியங்கள் சாதகமாக முடியும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் சில சூழ்ச்சிகளை கற்றுக் கொள்வீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**இடபம்**
சொத்து பிரச்னைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு சில ஆலோசனையை தருவீர்கள். வெற்றியைத்தரும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த பிரச்னைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் தள்ளிப்போன ஒப்பந்தம் கையெழுத்தாகும். மனசாட்சிப்படி செயல்படும் நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். சிலர் குறை கூறினாலும் அதைப் பெரிதாக்க வேண்டாம். முன் கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**சிம்மம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வந்து நீங்கும். அதிகாரியுடன் மோதல்கள் வேண்டாமே.

**கன்னி**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன் பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். உத்தியோகத்தில் புது பொறுப்புகள் ஏற்பீர்கள். புகழ் கௌரவம்கூடும் நாள்.

**துலாம்**
மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவு கிடைக்கும். சாதிக்கும் நாள்.

**விருட்சிகம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் விலகிச் சென்றவர்கள் விரும்பி வருவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் சந்தேகபடுவதை முதலில் நிறுத்துங்கள். வியாபாரத்தில் பெரிய இழப்புகள் ஏற்படக் கூடும். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். நாவடக்கம் தேவைப்படும் நாள்.

**மகரம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**மீனம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

# தமிழகத்தில் 3 நாட்களுக்கு கனமழை வாய்ப்பு

*சென்னை, நவ. 06*

தமிழகத்தில் நேற்று முதல் 3 நாட்களுக்கு சில மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் பா.செந்தாமரைக்கண்ணன் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தென் தமிழகம் மற்றும் அதையொட்டிய பகுதிகளில் நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தின் பெரும்பாலான இடங்களில் பரவலாக மழை பெய்துள்ளது.

தமிழ்நாடு, புதுச்சேரி மாநிலங்களில் வரும் 7, 8, 9ஆம் திகதிகளில் சில இடங்களிலும், 10ஆம் திகதி ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி, ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. நாளை மேற்கூறிய மாவட்டங்கள் மற்றும் மதுரை, விருதுநகர், வேலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும். வரும் 7ஆம் திகதி கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், நீலகிரி, வேலூர், திருப்பத்தூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், ஈரோடு மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யும். (அ)

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு காய்ச்சல்!

## ஓய்வு எடுக்கும்படி மருத்துவர் அறிவுறுத்தல்

*சென்னை, நவ. 06*

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால், சில நாட்களுக்கு ஓய்வில் இருக்கும்படி மருத்துவர் மோகன் காமேஸ்வரன் அறிவுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலினின் தனிப்பட்ட மருத்துவரும், காது, மூக்கு தொண்டை ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநரும், தலைமை மருத்துவருமான மோகன் காமேஸ்வரன் வெளியிட்டுள்ள மருத்துவ அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நவம்பர் 3ஆம் திகதி இருமல், காய்ச்சல் அறிகுறிகள் இருந்தன. இதையடுத்து அவருக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டது. பரிசோதனை முடிவில் அவருக்கு வைரல் ஃப்ளூ காய்ச்சல் இருப்பது உறுதியானது. காய்ச்சலுக்கான சிகிச்சைகளை எடுத்துக் கொள்ளுமாறும், அடுத்தசில நாட்களுக்கு ஓய்வு இருக்கும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது- இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (அ)

# பாம்பன் புதிய ரயில் பாலத்தின் பணிகள் 92 சதவீதம் நிறைவு!

## பிரதமர் மோடி அடுத்த மாதம் திறந்துவைப்பதாக பாஜகவினர் தகவல்

*ராமநாதபுரம், நவ. 06*

இராமேசுவரம் பாம்பனில் ரூ.535 கோடியில் அமைக்கப்பட்டு வரும் புதிய ரயில் பாலத்தின் பணிகள் 92 சதவீதம் நிறைவடைந்துள்ள நிலையில், இந்தப் பாலத்தை வரும் டிசம்பர் மாதம் பிரதமர் மோடி திறந்து வைப்பார் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஆன்மிகத் தலமான இராமேசுவரத்துக்கு ஆண்டுதோறும் ஒரு கோடி பேர் வந்து செல்கின்றனர். இராமேசுவரம் தீவை, பிரதான நிலப் பகுதியுடன் இணைக்கும் வகையில் பாம்பன் ரயில் பாலம் அமைந்துள்ளது.

191இல் ரயில் போக்குவரத்து தொடங்கப்பட்ட பழைய பாம்பன் ரயில் பாலத்தின் நடுவே கப்பல்கள் செல்லும் வகையில், ஜெர்மன் பொறியாளர் ஷெர்ஸ் என்பவரால் அமைக்கப்பட்டுள்ள தூக்குப் பாலம், கப்பல்கள் செல்லும்போது 2 பகுதிகளாக மேலே விரிந்து வழிவிடும். நூறு ஆண்டுகளைக் கடந்து செயல்பட்ட இந்தப் பாலத்தில் 2022இல் அடிக்கடி பழுது ஏற்பட்டு, மாதக்கணக்கில் ரயில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. இதனால் கடந்த ஓராண்டுக்கும் மேலாக ராமேசுவரம் ரயில்கள் அனைத்தும் மண்டபம் வரை மட்டுமே இயக்கப்படுகின்றன.

இந்நிலையில், ரூ.535 கோடியில் பாம்பனில் புதிய ரயில் பாலம் கட்டுவதற்கு பிரதமர் மோடி 2019-ல் அடிக்கல் நாட்டினார். கட்டுமானப் பணிகள் 2022இல் தொடங்கினாலும், கரோனா ஊரடங்கால் பணிகளில் தாமதம் ஏற்பட்டது. கடந்த 2 மாதங்களாக பணிகள் துரிதப்படுத்தப்பட்டு, தற்போது நிறைவு பெறும் நிலையில் உள்ளன.

மண்டபத்திலிருந்து பாம்பன் வரை 2.07 கி.மீ. நீளம் கொண்ட இந்தப் பாலத்தின் நடுவே அமையும் செங்குத்து தூக்குப் பாலம், ஆசியாவிலேயே கடல் பகுதியில் அமையும் முதல் பாலமாகும். செங்குத்து தூக்குப் பாலம் 72.1 மீற்றர் நீளம், 3 மீற்றர் உயரத்தில், 500 தொன் எடையில் அமைக்கப்படுகிறது. தூக்குப் பாலத்தை தாங்கும் இரும்புத் தூண்கள் 35 மீற்றர் உயரத்தில், 600 தொன் எடையில் அமைக்கப்படுகின்றன.

மொத்தத்தில் 92 சதவீத பணிகள் முடிவடைந்துள்ளன. டிசெம்பருக்குள் அனைத்து பணிகளையும் நிறைவு செய்யும் வகையில், பணிகள் வேகமாக நடைபெற்று வருவதாக ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

புதிய ரயில் பாலத்தை திறந்துவைக்க பிரதமர் மோடி வரும் டிசெம்பரில் இராமேசுவரம் வர உள்ளதாக பாஜகவினருக்கு கட்சி மேலிடத்திலிருந்து தகவல் வந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இதையடுத்து, திறப்பு விழா முன்னேற்பாடுகள் குறித்து ஆலோசித்து வருவதாக கட்சியினர் தெரிவித்தனர். (அ)

# 30 மாவட்டங்களில் பயணிக்கும் முத்தமிழ் தேர்

*நாகர்கோவில், நவ. 06*

முன்னாள் முதல்வர் கருணாநிதியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்ள இருக்கும் முத்தமிழ் தேர் அலங்கார ஊர்தி கன்னியாகுமரியில் நேற்று புறப்பட்டது.

கன்னியாகுமரி காந்தி மண்டபம் அருகில் இந்தப் பயணத்தை, அமைச்சர்கள் பெரியகருப்பன், அன்பில் மகேஸ், மனோ தங்கராஜ், கயல்விழி செல்வராஜ் ஆகியோர் முரசு கொட்டித் தொடங்கிவைத்தனர்.

இதில் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் பேசும்போது, "எழுத்தை மூச்சாகக் கொண்ட கருணாநிதி பயன்படுத்திய பேனாவடிவில் ஊர்தி அமைக்கப்பட்டுள்ளது. அவரது புகைப்படங்கள் ஊர்தியின் வெளியே இடம்பெற்றுள்ளன. அவரது சிறப்புகளை விளக்கும் குறும்படத்தை திரையிடும் வகையில் ஒளித்திரையும் அமைக்கப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் இந்த ஊர்தி சுற்றுப்பயணம் மேற்கொள்ளும்.

வாகனத்தின் உள்ளே முன்னாள்முதல்வர் கருணாநிதி வசித்த கோபாலபுரம் இல்ல உள்வடிவமும், அதில் அஞ்சுகம் அம்மாள்சிலையும், அருகில் கருணாநிதி அமர்ந்திருப்பது போன்ற சிலையும், அவர் பயன்படுத்திய நூலகத்தின் மாதிரி வடிவமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதும் 30 மாவட்டங்களுக்கு பயணம் மேற்கொள்ளும் இந்த அலங்கார ஊர்தி, வரும் டிசம்பர் 4-ம் தேதி சென்னைக்கு வரும்" என்றார். (அ)

# ஜனாதிபதியிடம் 04 கோரிக்கைகள் முன்வைத்துள்ள பொதுஜன பெரமுன

கொழும்பு, நவ. 06

**பொதுஜன பெரமுன ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் உடன் அமுல்படுத்துமாறு நான்கு விசேட கோரிக்கைகளை முன்வைத்துள்ளது.**

இதன்படி, சமுர்த்தி கொடுப்பனவை தொடர்ந்தும் வழங்குதல், உரமானியத்தை தொடர்ந்தும் வழங்குதல், நாடாளுமன்ற உறுப்பினர்களின் பரவலாக்கப்பட்ட மறு ஒதுக்கீடு மற்றும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்கும் போது தொழில் இழப்புகளை தவிர்த்தல் ஆகிய நான்கு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கட்சியின் செயலாளரின் கையொப்பத்துடன் குறித்த கோரிக்கைகள் அடங்கிய கடிதம் ஜனாதிபதியிக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நாட்டில் வறுமையை ஒழிப்பதற்கான சிறந்த பொறிமுறை சமுர்த்தி திட்டம். எனவே இந்த திட்டத்தின் பெயரை மாற்றுவது பொருத்த மற்றது அல்ல என்றும் எனவும் பொதுஜன பெரமுன சுட்டிக்காட்டியுள்ளது. (அ)



# எனக்கு 700 மில்லியன் ரூபாவை வழங்க முன்வந்தார் ஹரக்கட்டா

## கூறுகிறார் அமைச்சர் டிரான் அலஸ்

கொழும்பு, நவ. 06

இலங்கைக்கு தான் நாடு கடத்தப்படுவதை தவிர்ப்பதற்காக ஹரக்கட்டா தனக்கு 700 மில்லியன் வழங்க முன்வந்தார் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

காலியில் இடம்பெற்ற நிகழ்வில் அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பதவியிலிருந்து தன்னை நீக்குவதற்காக சிரேஸ்ட அதிகாரிகளிற்கு பெருந்தொகை பணத்தை வழங்க பாதாளஉலக குழுவினர் தயாராகவுள்ளனர் எனவும் அமைச்சர் கூறினார்.

ஜனாதிபதிக்கு இந்த விடயம் தெரியும். எனக்கு இலஞ்சம் வழங்க முன்வந்தவர் கொல்லப்பட்டுள்ளார் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாதாள உலக குழுவினருக்கு உதவுவதன் காரணமாகவே குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன என சிரேஸ்ட பிரதிபொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார். (அ)

# புதிய பத்து தூதுவர்கள் நியமனம்



கொழும்பு, நவ. 06

இலங்கைக்கான புதிய தூதுவர்களாக நியமிக்கப்பட்டுள்ள 10 பேர் நேற்று கண்டி ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தமது நற்சான்றுப் பத்திரங்களைக் கையளித்தனர்.

லெட்வியா இராச்சியம், பிலிபைன்ஸ், கம்போடியா, போர்த்துக்கல் குடியரசு, சிரினாம் குடியரசு, ஜிபூட்டி குடியரசு, அங்கோலா குடியரசு, பின்லாந்து குடியரசு, பொலிவேரியன் குடியரசு,வெனிசுலா மற்றும் நோர்வே குடியரசு ஆகிய நாடுகளுக்காக இவ்வாறு புதிய தூதுவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் வெளியுறவு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி மற்றும் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ)

# கார் - லொறி மோதி விபத்து; முகாமைத்துவ உதவியாளர் பலி!

கொழும்பு, நவ. 06

மொரகஹஹேன ஹொரகஸ் சந்தி பகுதியில் லொறி ஒன்றும் காரும் நேருக்கு நேர் மோதியதில் நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மொரகஹஹேன பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்தில் உயிரிழந்தவர் கல்பத்த பியகம பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய சந்துன் ஜயசிங்க என்ற திருமணமானவர் ஆவார்.

உயிரிழந்தவர் கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொண்டு காரில் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோதே லொறியுடன் மோதி விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அவர் பயணித்த கார் பலத்த சேதமடைந்துள்ளதுடன், லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மொரகஹஹேன பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# பேக்கரி பொருட்களுக்கு விலை அதிகரிக்கப்படாது

கொழும்பு, நவ. 06

எரிவாயு விலை அதிகரிப்பு காரணமாக பேக்கரி கைத்தொழிலை பராமரிக்கும் திறன் இல்லை என அகில இலங்கை பேக்கரி சங்கம் தெரிவித்துள்ளது.

பேக்கரி பொருட்களின் விற்பனை ஏற்கனவே 25 வீதம் குறைந்துள்ளதாக அதன் தலைவர் என். கே ஜயவர்தன தெரிவித்தார்.

எரிவாயுவின் விலை அதிகரித்தாலும் பேக்கரி பொருட்களின் விலை அதிகரிக்கப்படாது என என். கே.ஜயவர்தன மேலும் தெரிவித்தார். (அ)

# வீட்டுக்குள் நுழைந்த இருவர் தந்தை, மகன் மீது தாக்குதல்

கொழும்பு, நவ. 06

அடுலுகம, மாராவ பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றுக்குள் கூரிய ஆயுதங்களுடன் அத்துமீறி நுழைந்த இருவர் அங்கிருந்த தந்தை மற்றும் மகன் ஆகியோரை தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பண்டாரகம பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஆயுதங்களால் தாக்கப்பட்டதில் தந்தை படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். காயமடைந்த தந்தையும் மகனும் பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதிய சம்பவம் காரணமாக ஏற்பட்ட வாக்குவாதத்தின் பின்னரே, இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

# மனைவியின் தலையில் சுத்தியலால் தாக்கி கொலை செய்தவர் தானும் உயிர்மாய்ப்பு!

கொழும்பு, நவ. 06

அளுத்கம, பெனிபெந்தி கொட பிரதேசத்தில் தனது 30 வயதான மனைவியை கொலை செய்தார் எனக் கூறப்படும் 36 வயதான கணவர் தானும் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குடும்பத் தகராறு காரணமாக கணவர் தனது மனைவியை சுத்தியலால் தலையில் தாக்கிக் கொலை செய்துள்ளார். பின்னர், அந்த கணவரும் அவர்களது வீட்டுக்குள்ளே தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மரணங்கள் தொடர்பான விசாரணைகளை அளுத்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ரயில் பாதை பராமரிப்பில் ஈடுபட்டோர் மீது பாறைகள் சரிந்து வீழ்ந்ததில் ஐவர் காயம்!

கொழும்பு, நவ. 06

மலையக ரயில் பாதையில் பண்டாரவளை மற்றும் கினிகம ரயில் நிலையங்களுக்கு இடையில் ரயில் பாதை பராமரிப்பு பணிகளில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் மீது திடீரென உயரத்திலிருந்த பாறைகள் சில சரிந்து வீழ்ந்ததில் ஐவர் காயமடைந்துள்ளனர்.

பண்டாரவளை ரயில்வே பிரிவின் 5 ரயில்வே ஊழியர்களே பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

மலையக ரயில் பாதையில் பண்டாரவளை மற்றும் கினிகம ரயில் நிலையங்களுக்கு இடையில் 162ஆவது மைலில் உள்ள பாலத்துக்கு அருகில் கடமையில் ஈடுபட்டிருந்தபோதே இந்தச் சம்பவத்துக்கு முகங்கொடுத்துள்ளனர். (அ)

# பண மோசடியோடு தொடர்புபட்ட இருவரை கைதுசெய்ய மக்களின் உதவி கோரும் பொலிஸ்

கொழும்பு, நவ. 06

பண மோசடி தொடர்பில் தேடப்பட்டு வரும் சந்தேக நபர்கள் இருவரை கைது செய்ய பொலிஸார் பொதுமக்களின் உதவியை கோரியுள்ளனர்.

பத்தரமுல்லை வீதிப் பகுதியில் உள்ள தனியார் நிறுவனமொன்றுக்கு சொந்தமான கட்டிடம் மற்றும் தோட்டம் ஒன்றை புனரமைப்பதற்காக குறித்த நிறுவனத்திடம் இருந்து சுமார் ஒரு கோடி ரூபாவை இந்த சந்தேக நபர்கள் பெற்றுக் கொண்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் பெற்றுக் கொண்ட தொகை 9,943,108.03 ரூபா என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெறுமதிக்கு நிர்மாணப்பணிகளை மேற்கொள்ளாமல் இந்த சந்தேகநபர்கள் பணம் மோசடி செய்தமை தொடர்பில் மிரிஹான விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவில் குறித்த நிறுவனம் முறைப்பாடு செய்துள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த சந்தேகநபர்கள் இலக்கம் 31, 7, பபிலியான வீதி, நெதிமால தெஹிவளை என்ற முகவரியில் ஒப்பந்த நிறுவனத்தை நடத்தி வருவதுடன், அதன் உரிமையாளர்களாகவும் செயற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

ஒரு சந்தேக நபர் 31 வயதுடைய விக்னேஸ்வரன் கணேசன் எனவும் மற்றைய சந்தேகநபர் 36 வயதான ரேவல் நிரோஷனி ராஜரத்தினம் எனவும் பொலிஸார் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இவர்கள் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தால் விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவின் நிலைய கட்டளைத் தளபதி, 071 - 8137373 அல்லது 011 2852556 ஆகிய இலக்கங்களுக்கு அறிவிக்குமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எண்ணெய் தாங்கிகள் இந்தியா வசம்!

## ஆனந்த சாகர தேரர் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 06

**திருகோணமலை எண்ணெய் தாங்கி வளாகத்தில் உள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான எண்ணெய் தாங்கிகள் இந்தியாவினால் பல வந்தமாக கையகப்படுத்தப்பட்டுள்ளதாக பஹியங்கல ஆனந்த சாகர தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.**

தேசிய பிக்கு முன்னணியின் தலைவர் மற்றும் மிஹிந்தலை ராமஹா விகாரையின் தலைவர், பஹியங்கல ஆனந்த சாகர தேரர் உள்ளிட்ட தேரர்கள் குழுவொன்று திருகோணமலை எண்ணெய் தாங்கி வளாகத் திற்கு விஜயம் மேற்கொண்டுள்ளது.

குறித் எண்ணெய் தங்கி வளாகத்தை அவதானித்ததைத் தொடர்ந்து அவர் இந்த குற்றச் சாட்டை முன்வைத்துள்ளார்.

இந்த நிலையில், அனுமதி யின்றி எண்ணெய் தங்கி வளாகத்திற்குள் பிரவேசிக்க முடியாது என பாதுகாப்பு அதி காரிகள் பிக்குகளுக்கு அறிவித் துள்ளனர்.

இருப்பினும், இந்திய அமைச்சரினால் குறித்த வளா கத்திற்குள் பிரவேசிக்க முடிய மாயின் இலங்கை பிரஜைக ளான எமக்கு ஏன் பிரவேசிக்க முடியாது என பிக்குகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பாது காப்பு அதிகாரிகள் எண்ணெய் தாங்கி வளாகத்தை பார்வையிடு வதற்கு அனுமதி வழங்கியுள்ள தாக குறிப்பிடப்படுகிறது. (அ)

# ரூபாவின் பெறுமதி உயர்வு

கொழும்பு, நவ. 06

அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி இந்த ஆண்டு 10.3 வீதத்தால் அதிகரித்திருப்பதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

வருட ஆரம்பம் முதல் இந்த வாரம் வரையான காலப்பகுதி வரையில் இலங்கை ரூபாவின் பெறுமதி ஏனைய நாணயங்க ளுக்கு எதிராகவும் அதிகரித் துள்ளது.

வருடத்தின் முதல் எட்டு மாதங்களில் யூரோ, ஸ்ரேர்லிங் பவுண்ட், ஜப்பானிய யென், இந்திய ரூபாய் மற்றும் அவுஸ் திரேலிய டொலர் ஆகிய வற்றுக்கு எதிராக இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரித் துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதன்படி, இந்த ஆண்டு இதுவரையான காலப்பகுதி வரை இலங்கை ரூபாவின் பெறுமதி யென்னுக்கு எதிராக 25.2 சதவீதமும், ஸ்டெர்லிங் பவுண்டிற்கு எதிராக 8.9 சத வீதமும், யூரோவுக்கு எதிராக 10.6 சதவீதமும், இந்திய ரூபாய்க்கு எதிராக 10.9 சத வீதமும் உயர்ந்துள்ளமை குறிப் பிடத்தக்கது.

(அ)

# இலங்கை - இந்திய இடையில் சர்வதேச கடல் எல்லை சந்திப்பு

கொழும்பு, நவ. 06

இலங்கை மற்றும் இந்திய கடற்படையினருக்கு இடையில் 33 ஆவது சர்வதேச கடல் எல்லை சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

காங்கேசன்துறை வடக்கு கடற்பரப்பில் இந்திய கடற்ப டையின் சுமித்ரா கப்பலில் இந்த சந்திப்பு இடம்பெற்றதாக கடற் படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்து சமுத்திர பிராந்தியத் தில் பொதுவான கடல்சார் சவால்களை சமாளிக்க எடுக்கப் பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இரு நாடுகளினதும் கடற்படைகள் மற்றும் கடலோ ரப் பாதுகாப்பு திணைக்களங்க ளுக்கு இடையில் கருத்துக்க ளைப் பகிர்ந்து கொள்வதற்காக ஆண்டுதோறும் இந்த சந்திப்பு நடத்தப்படுகிறது.

(அ)

# சுமந்திரன் கூறிய கருத்தினால் சம்பந்தனுக்கு மன வருத்தமாம்!

கொழும்பு, நவ. 06

இலங்கை தமிழரசுக்கட்சி யின் யாழ்.மாவட்ட பாராளு மன்ற உறுப்பினரும், அக்கட்சி யின் பேச்சாளருமான ஜனாதி பதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந் திரன் பொதுவெளியில் தன்னை இராஜினாமாச் செய்யுமாறு கூறிய கருத்தானது மனவருத் தமளிப்பதாக அக்கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதி ராசாவிடம் சிரேஷ்ட தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள் ளார்.

இலங்கை தமிழரசுக்கட்சி யின் தலைவர் மாவை சேனாதி ராசாவுக்கும், அக்கட்சியின் சிரேஷ்ட தலைவர் இரா.சம்பந் தனுக்கும் இடையிலான இரு சந்திப்புக்கள் நடைபெற்றிருந் தன. இந்தச் சந்திப்பின்பேதே, இரா.சம்பந்தன் மேற்கண்ட வாறு தனது மனவருத்தத்தினை தெரிவித்துள்ளார்.

முன்னதாக, சுமந்திரன் எம். பி. தொலைக்காட்சி நிகழ்ச்சி யொன்றில் தகவலறியும் உரி மைச்சட்டத்தின் கீழ் பெறப் பட்ட தகவல்களுக்கு அமை வாக சம்பந்தன் எம்.பியின் பாராளுமன்ற வரவு நாட்கள் மற்றும் இதர படிகள் தொடர் பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில்,

சம்பந்தனின் முதுமை மற் றும் உடல்நலக்குறைவு காரண மாக அவர் பதவியிலிருந்து இராஜினாமச் செய்வது பொருத்தமானது என்ற தனது தனிப்பட்ட கருத்தினையும், ஏலவே கட்சியில் எடுக்கப்பட்ட தீர்மானத்தினையும் பகிரங்க மாக தெரிவித்திருந்தார். இதனையடுத்து, மாவை.சோ. சேனாதிராசாவை, நேரில் சந்திப்பதற்கு வருகை தருமாறு இரா.சம்பந்தன் அழைப்பு விடுத்திருந்தார்.

அதற்கு அமைவாக நடை பெற்ற குறித்த சந்திப்புக்கள் தொடர்பில் மாவை.சோ. சேனாதிராசா தெரிவிக்கையில்,

சுமந்திரன், சம்பந்தன் தொடர்பில் வெளியிட்ட கருத் துக்களை அடுத்து சம்பந்தன் என்னை நேரில் சந்திப்பதற்கான அழைப்பினை விடுத்திருந்தார். அதனையடுத்து நான் அவரு டன் இருவேறு சந்திப்புக்களை தொடர்ச்சியான நாட்களில் மேற்கொண்டிருந்தேன்.

முதலாவது சந்திப்பின் போது, சுமந்திரனின் கருத்துக் கள் தொடர்பில் அவர் மன வருத்தத்தினை தெரிவித்த தோடு, அந்த விடயம் சம்பந் தமாக விரிவானதொரு கலந் துரையாடலை மேற்கொள்ள விருப்பதாகவும் அவர் குறிப் பிட்டார். அத்துடன், குறித்த விடயம் சம்பந்தமாக தீர்மான மொன்றை அவர் எடுப்பார் என்ற தொனிப்படவும் கருத்துக் களை வெளிப்படுத்தினார்.

அதேநேரம், குறித்த விடய மானது கட்சியின் உள்ளக விவ காரமாக இருப்பதன் காரண மாக, அவ்விடயம் சம்பந்தமாக பொதுவெளியில் உரையாடல் களை தவிர்ப்பதோடு, விடயங் களை பூதாகரமாக்குவதை தவிர்ப்பதும் எமது நிலைப் பாடாகும். எனினும் அவ்விட யம் சம்பந்தமாக கட்சி உரிய வாறான நடவடிக்கைகளை முன் னெடுக்கும் - என்றார். (அ)

# சட்டவிரோதமாக இத்தாலி செல்ல முயன்ற இருவர் கைது!

கொழும்பு, நவ. 06

போலி ஆவணங்களை பயன் படுத்தி இத்தாலி செல்ல முயன்ற பெண்ணொருவர் உள்ளிட்ட 2 பேர் குடிவரவு மற்றும் குடிய கல்வு அதிகாரிகளால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

புத்தளம் - தொடுவாவ பகு தியைச் சேர்ந்த 54 வயதுடைய பெண்ணொருவரும் அவரது உறவினரான 23 வயதுடைய இளைஞரொருவருமே கைதா கியுள்ளனர்.

கைதான குறித்த பெண் முன் னதாக இத்தாலியில், வீட்டுப் பணிப்பெண்ணாக பணியாற்றி யுள்ளதாகவும் தெரியவந்துள் ளது. (அ)

# நூறு கோடி ரூபா சீனி வரி மோசடியில் ஈடுபட்ட அரசு

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 06

சீனி மீதான வரியை மாற்றி யமைத்ததில் பெரும் மோசடி நடந்திருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரி வித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழில் நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ் 44 ஆவது கட்டமாக மெதிரி கிரிய லங்காபுர மகா வித்தியா லயத்திற்கு ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

சீனி மீது 25 சதமாக இருந்த வரி, தற்போது 50 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வரி அதிகரிப்புக்கு முன்னர் 224,000 மெற்றிக்தொன் 25 சத வரியில் சந்தைக்கு விடப் பட்டதன் காரணமாக அரசாங் கத்திற்கு 100 கோடி வரி வரு மான இழப்பு ஏற்பட்டுள்ளது.

22,000 மெற்றிக் தொன சீனி இரகசியமாக வெளியிடப்பட்ட தன் காரணமாகவே இந்த நட் டம் ஏற்பட்டது.

இந்த நட்டங்களை தவிர்க் கும் வகையில், வற் மற்றும் தொழில் வல்லுநர்கள் மீது பாரிய வரிகள் விதிக்கப்பட் டுள்ளன.

இந்த சீனி மாபியாவில் அங் கம் வகிக்கும் கூட்டாளிகளை பாதுகாக்க அரசாங்கம் செயல் பட்டுள்ளது.

இதுபோன்ற மோசடிக ளுக்கு இடமளித்திருப்பது எதிர் காலத் தேர்தல்களில் ஆதாயம் அடையவா என்ற சந்தேகம் எழு கிறது. இந்த வரி மோசடியில் அரசாங்கத்தின் தலையீடுநேரடி யாகவே இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் முறை யான விசாரணைகள் நடத்தப்பட்டு மீண்டும் வரி விதிக்கப்பட வேண்டும்- என்றார்.

(அ)

# அரசாங்கம் சலுகைகளை வழங்காவிடின் பேக்கரி தொழில் அழிந்துபோகும் அபாயம்

கொழும்பு, நவ. 06

பேக்கரி தொழில் வளர்ச்சிக்கு அரசாங்கம் சலு கைகளை வழங்காவிடிடன் இத்தொழில் அழிந்து போகும் அபாயம் உள்ளதாக இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் என். கே. ஜய வர்தன தெரிவித்தார்.

எரிவாயு, சீனி , எரிபொருள் ஆகியவற்றின் விலை அதிகரிக்கப்பட்ட போதிலும் பாண் உள்ளிட்ட பேக்கரி பொருட்களின் விலை அதி கரிக்கப்பட மாட்டாது எனவும் அவர் தெரி வித்தார்.

தற்போது பாண் உள்ளிட்ட பேக்கரி பொருட் களின் விற்பனை 75 வீதத்துக்கும் அதிகமாக குறை வடைந்துள்ளதாக சங்கத்தின் தலைவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை, சீனி , எரிவாயு , மின்சாரம் , எரிபொருள் ஆகியவற்றின் விலையேற்றம் பேக்கரி தொழிலை பெரிதும் பாதிக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், நுகர்வோர் மீது சுமையை சுமத்தாமல் பேக்கரி உரிமையாளர்களே சுமையை சுமக்க நேரிடும் எனவும் சங்கத்தின் தலைவர் தெரி வித்தார்.

(அ)

# விஹாரமகாதேவி பூங்கா இனி கொழும்பு மாநாகர சபையிடம்

கொழும்பு, நவ. 06

கொழும்பு - விஹாரமகாதேவி பூங்காவின் பொறுப்பை கொழும்பு மாநாகர சபையிடம் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

தமது அதிகார சபைக்குட்பட்ட நிர்வாக பொறுப்பை கொழும்பு மாநாகர சபைக்கு மாற்று வதற்கு அனுமதி கிடைத்துள்ளதாக நகர அபிவி ருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் எம்.ஜி.கே ரணவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகர சபையின் கோரிக்கைக்கு அமையவே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் விகாரமஹாதேவி பூங்காவின் பொறுப்பு கொழும்பு மாநகர சபையின் கீழ் இருந்தது.

உலக வங்கியின் உதவித் திட்டத்தின் கீழ் மேற் கொள்ளப்பட்ட அபிவிருத்தி பணிகளுக்காக 2004 ஆம் ஆண்டில் விஹாரமகாதேவி பூங்கா நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் கொண்டு வரப்பட்டதும் நினைவுகூரத்தக்கது. (அ)

# வழிப்பறிக் கொள்ளைகள் குடாநாட்டில் அதிகரிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 06

**யாழ் குடாநாட்டில் உள்ள காரைநகர் - யாழ்ப்பாணம் முதன்மை வீதியில் சங்கானைக்கும் சண்டிலிப்பாய்க்கும் இடையே வழிப்பறி கொள்ளை சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இந்த விடயம் தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடு வழங்கியும் நடவடிக்கை இல்லை எனவும் விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 2 ஆம் திகதி முச்சக்கர வண்டியில் பயணித்த அரிசி ஆலை உரிமையாளரை மறித்த மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவரைத் தாக்கிவிட்டு கழுத்திலிருந்த சங்கிலியை அபகரித்துத் தப்பித்துள்ளனர்.

வங்கியில் பணம் வைப்பிலிடுவதற்கு சென்ற போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அண்மைய நாள்களில் பெண் ஒருவர் உட்பட மேலும் பலரிடம் குறித்த பகுதியில் வழிப்பறி கொள்ளை இடம் பெற்றுள்ளது.

அவை தொடர்பில் முறைப்பாடுகள் வழங்கப்பட்டும் சம்பவத்துடன் தொடர்புடையவர்களின் அடையாளங்களை வழங்கிய போதும் மானிப்பாய் பொலிஸார் நடவடிக்கை எடுக்காதது பொதுமக்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கைக்கு அடுத்த வாரம் கிடைக்கும் 54 வகையான அத்தியாவசிய மருந்துகள்

கொழும்பு, நவ. 06

புற்றுநோய் மற்றும் சிறுநீரக நோய்களுக்கான மருந்துகள் உள்ளிட்ட 54 வகையான அத்தியாவசிய மருந்துகள் அடுத்த வாரத்திற்குள் நாட்டிற்கு கிடைக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன், 58 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான மருந்து பொருட்களும் கிடைக்கவுள்ளதாக சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக எதிர்வரும் நாட்களில் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மருத்துவ உதவிகள், பங்களாதேஷ் சுகாதார அமைச்சின் ஊடாக நாட்டிற்கு கிடைக்கவுள்ளது.

இலங்கைக்கான பங்களாதேஷ் தூதுவர் மற்றும் சுகாதார அமைச்சருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

நாட்டில் தற்போது நிலவும் மருந்துகள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் இலங்கை அரசுக்கும் பங்களாதேஷ் அரசுக்கும் இடையில் மருந்துகளை கொள்வனவு செய்வது தொடர்பில் நீண்டகால வேலைத்திட்டம் ஒன்றை தயாரிப்பதன் அவசியம் குறித்து கலந்துரையாடப்பட்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# ஆறு மாகாணங்களில் மின்னல் தாக்கும் அபாயம்

கொழும்பு, நவ. 06

ஆறு மாகாணங்களில் கடுமையான மின்னல் தாக்கம் ஏற்படுவதற்கான 'ஆம்பர்' வானிலை எச்சரிக்கையை வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

மேற்கு, மத்திய, சப்ரகமுவ, வடமத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களில் பல இடங்களில் மாலை அல்லது இரவு வேளையில் கடுமையான இடி மின்னலுடன் கூடிய கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேலும், இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக பலத்த காற்று வீசக் கூடும் என அது மேலும் தெரிவித்துள்ளது.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைப்பதற்கு பின்வரும் நடவடிக்கைகள் உட்பட போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

- இடியுடன் கூடிய மழையின் போது நெல் வயல்கள், தேயிலைத் தோட்டங்கள் மற்றும் திறந்த நீர்நிலைகள் போன்ற திறந்தவெளிப் பகுதிகளைத் தவிர்க்கவும்.
- இடியுடன் கூடிய மழையின் போது கம்பியில் இணைக்கப்பட்ட தொலைபேசிகள் மற்றும் இணைக்கப்பட்ட மின் சாதனங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்.
- சைக்கிள்கள், டிராக்டர்கள் மற்றும் படகுகள் போன்ற திறந்தவெளி வாகனங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்.
- மரங்கள் மற்றும் மின் கம்பிகள் விழுந்து கிடப்பதில் எச்சரிக்கையாக இருங்கள்
- அவசர உதவிக்கு உள்ளூர் பேரிடர் மேலாண்மை அதிகாரிகளை தொடர்பு கொள்ளவும். (அ)

# முற்பண தனிநபர் வருமான வரியை தடுக்க கோரி தாக்கல் செய்யப்பட்ட மூன்று மனுக்கள் தள்ளுபடி

கொழும்பு, நவ. 06

நீதித்துறை அதிகாரிகள் மீது, முற்பண தனிநபர் வருமான வரி விதிக்கப்படுவதை தடுக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டிருந்த மூன்று மனுக்களை மேன்முறையீட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

ஐந்து பேர் கொண்ட நீதியரசர்கள் ஆயத்தின் பெரும்பான்மையான நீதியரசர்களால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய, குறித்த மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

இலங்கை நீதிச் சேவை சங்கம், உயர் நீதிமன்ற நீதியரசர்கள் சங்கம் மற்றும் தொழிலாளர் நீதிமன்ற தலைவர்கள் சங்கம் ஆகியவற்றினால் குறித்த வரிக்கு எதிராக இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

# அஸ்வெசும 2ஆம் கட்டத்துக்கு விண்ணப்பம் ஏற்கும் நடவடிக்கைகள் ஜனவரியில் ஆரம்பம்

கொழும்பு, நவ. 06

அஸ்வெசும திட்டத்தின் இரண்டாம் கட்ட நிவாரணத்துக்காக விண்ணப்பங்களை ஏற்கும் நடவடிக்கை எதிர்வரும் ஜனவரி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சமூக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

அஸ்வெசும பயனாளிகளின் பல்வேறு பிரச்னைகள் குறித்து அந்தந்த மாவட்ட செயலாளர் அலுவலக அதிகாரிகளால் ஆராயப்படுமென சமூக நலன்புரி நன்மைகள் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர் கமல் பத்மசிறி குறிப்பிட்டார்.

தற்போதுள்ள பிரச்னைகளை மையப்படுத்தி தீர்வு காண்பதற்காக நாளை முதல் ஆரம்பிக்கப்படவுள்ள விசேட வாரத்தின் கீழ் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென அவர் தெரிவித்தார்.

ஆட்பதிவு திணைக்களம், வங்கி உள்ளிட்ட பயனாளிகளின் பல்வேறு பிரச்னைகள் காணப்படும் இடங்களுக்கு அலுவலர்கள் அனுப்பி வைக்கப்படுவார்களெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும திட்டத்தை விரிவாக்கவும் தற்போது காணப்படும் பிரச்னைகளை தீர்க்கவும் நாளை முதல் விசேட வாரத்தை நடைமுறைப்படுத்த நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 11 ஆம் திகதி வரை இந்த விசேட வாரம் நடைமுறைப்படுத்தப்படுமென அமைச்சு கூறியுள்ளது.

அஸ்வெசும நிவாரணத் திட்டத்தில் நிலவும் பிரச்னைகளுக்கு உடனடியாக தீர்வு கண்டு, தாமதமின்றி தகுதியான பயனாளிகளுக்கு உரிமைகள் வழங்கப்படுவதை உறுதி செய்யும் நோக்கில் இந்த விசேட வாரம் அமுல்படுத்தப்படுகின்றது. (அ)

# 2024ஆம் ஆண்டிற்குள் பாடசாலைகளில் நிரப்பப்படும் அதிபர்களின் வெற்றிடங்கள்

கொழும்பு, நவ. 06

எதிர்வரும் ஆண்டிற்குள் இலங்கை பாடசாலைகளில் உள்ள அனைத்து அதிபர் வெற்றிடங்களையும் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொழும்பு டி. எஸ் சேனநாயக்க வித்தியாலயத்தில் நடைபெற்ற இலங்கை அதிபர் சேவையின் தரம் மைக்கு 4672 புதிய அதிபர்களை ஆட்சேர்ப்பு செய்து நியமனம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு அமைச்சர் இந்தக் கருத்துக்களை தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், "கல்வித்துறையில் நிலவும் வெற்றிடங்களை தொடர்ச்சியாகவும் முறையாகவும் பேணுவதற்கு அவற்றை நிரப்புவது இன்றியமையாதது ஆகும்.

தற்போது கல்வி நிர்வாக சேவையில் 808 வெற்றிடங்கள் காணப்படுகிறது, அதில் 50 வீதத்தை பூர்த்தி செய்வதற்கு திறைசேரி அனுமதியளித்துள்ளது.

அதன்படி, குறித்த 404 வெற்றிடங்கள் வெகு விரைவில் பூர்த்தி செய்து தரப்படும்.

கவுன்சிலிங் சேவையில் இருக்க வேண்டிய ஆசிரியர்களின் எண்ணிக்கை 4200 ஆக காணப்பட்ட போதிலும் தற்போது கிட்டத்தட்ட 1100 பேர் மாத்திரமே சேவையில் உள்ளனர்.

அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஏற்கனவே அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் கல்விச் சேவையில் 1800 அதிகாரிகள் இருக்கவேண்டிய நிலையில், தற்போது 800 அதிகாரிகளுக்கு மேல் இல்லை.

எதிர்காலத்தில் 707 அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர்.



புதிதாக நியமனம் பெற்ற இந்த அதிபர்கள் எதிர்நோக்கும் சவால்கள், சில வருடங்களுக்கு முன்னர் அதிபர்கள் எதிர்கொண்ட அனுபவங்கள் மற்றும் சவால்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டவை.

விரைவில் இந்த அதிபர்கள் டிஜிட்டல் முறைமை மூலம் எதிர்காலத்தை எதிர்கொள்ளும் குழந்தைகளின் தேவைகளை சரியாகக் கண்டறிந்து அவர்களுக்கான பாடசாலையை தயார்படுத்த வேண்டும்.

அண்மையில் அவர்களுக்கென வழங்கப்படும் பயிற்சியில் அது குறித்து விசேட கவனம் செலுத்துமாறு பயிற்சியாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் இவ் வருடம் அமைச்சுப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட போது பாடப்புத்தக விநியோகம், சீருடை விநியோகம் என பல விடயங்களில் சவால்கள் காணப்பட்டு வந்த நிலையில் தற்போது அதற்கான தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் நாட்களில் பாடசாலைகளில் மதிய உணவை அனைத்து ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கும் வழங்க திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அபிவிருத்தி கட்டணத்தை 50 வீதத்தால் அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தற்போது தகவலொன்று பரவி வரும் நிலையில் கல்வி அமைச்சு மூலம் அவ்வாறானதொரு தீர்மானம் ஒரு போதும் வழங்கப்படவில்லை." என தெரிவித்தார்.

# மயிலத்தமடுவில் போருக்கு முன் பொதுமக்கள் வசித்துள்ளனரா?

## ஆதாரங்களை கோருகிறது ஏறாவூர் நீதிமன்றம்

மட்டக்களப்பு, நவ. 06

**மட்டக்களப்பு மயிலத்தமடு,மாதவனை பகுதியில், யுத்தத்திற்கு முன்னர் 13 குடும்பங்கள் வசித்து வந்தாகக் கூறப்படும் நிலையில், அதற்கான ஆதாரங்களை ஒரு வாரகாலப் பகுதிக்குள் சமர்ப்பிக்குமாறு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதி அன்வர் சதாத் உத்தர விட்டுள்ளார்.**

மயிலத்தமடு,மாதவனை பகுதியில் முன்னெடுக்கப்படும் அத்துமீறிய காணி அபகரிப்பு தொடர்பில் மகாவலி அபிவிருத்தி திணைக்களத்தினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெற்றுவரும் நிலையில், இன்றைய தினம் வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

தற்போது மயிலத்தமடு மற்றும் மாதவனைப் பகுதியில் குடியேறியுள்ள குடி யேற்றவாசிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள், 1962ஆம் ஆண்டு தொடக்கம் 1983ஆம் ஆண்டு வரை,

13 குடும்பங்கள் வசித்துவந்ததாகவும், 1983ஆம் இடம்பெற்ற யுத்த சூழ்நிலையினால் அப் பகுதியிலிருந்த 12 பேர் படுகொலை செய்யப்பட்ட பின்னர் ஏனையோர் வெளியேறிச் சென்ற நிலையில், யுத்தம் நிறைவு டைந்த பின்னர், மீள குடியமர வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட எந்த ஆவணங்களும் தங்களிடம் இல்லாத ஆவனங்கள் யுத்த காலப்பகுதியில் காணாமல்போயுள்ளதனால் அவற்றினை அரச அதிகாரிகள் வழங்காத நிலைமை தொடர்பில், நீதிமன்றுக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஆராய்ந்த நீதிபதி, யுத்தத்திற்கு முன்னர் 13 குடும்பங்கள் வசித்து வந்தாகக் கூறப்படும் நிலையில், அதற்கான ஆதாரங்களை ஒரு வாரகாலப் பகுதிக்குள் சமர்ப்பிக்குமாறு கூறி வழக்கை, எதிர்வரும் 10ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (அ)

# காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்கான ஆசிரிய ஆலோசகர் பலி

மட்டக்களப்பு, நவ. 06

காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்கான ஆசிரிய ஆலோசகர் வைத்தியசாலையில் சிகிச்ச பெற்று வந்த நிலையில் கடந்த 3ஆம் திகத மாலை உயிரிழந்துள்ளார்.

அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தில் சேவையாற்றி வந்த அட்டாளைச்சேனை பிரதேசத்தினைச் சேர்ந்த விஞ்ஞானப் பாட ஆசிரிய ஆலோசகரே இவ்வாறு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

கடந்த 22 ஆம் திகதி அதிகாலை வேளையில் தனது விவசாயக் காணிக்கு சென்று கொண்டிருந்த வேளையில் காட்டு யானைகள் சில வழிமறித்து இவரை தாக்கியுள்ளன. அட்டாளைச்சேனை சம்புக்களப்பு வீதியில் இச்சம்பவம் இடம்பெற்றதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதிகாலை வேளை மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த இவர் காட்டு யானைகளைக் கண்ணுற்று மோட்டார் சைக்கிளை பாதையில் நிறுத்தி வைத்து விட்டு அருகிலிருந்த கால்வாய்க்குள் இறங்கி நின்றுள்ளார்.

ஒரு மணி நேரத்திற்கு மேலாக யானைகளின் நடமாட்டத்தினை காணாததால் வீதிக்கு அவர் வந்த வேளையில், மரங்களின் பின்னால் மறைந்து நின்ற யானைகள் அவரை தாக்கி தூக்கி வீசியுள்ளன. இதனால் பலத்த காயங்களுக்கு இவர் இலக்கானதுடன், இவரது கால் கைகளுக்கும் உடைவு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் இவர் மேலதிக சிகிச்சைக்காக கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு கடந்த 12 தினங்களாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார். (அ)



# கல்முனை ரஹ்மத் பவுண்டேசனால் புனித குர்ஆன் பிரதிகள் அன்பளிப்பு

அம்பாறை, நவ. 06

கல்முனை கிறீன்பீல்ட் முஹ்யித்தீன் மஸ்ஜிதினால் நடாத்தப்பட்டு வருகின்ற கிறீன்பீல்ட் “காதிரிய்யா” குர்ஆன் மத்ரஸாவில் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற மாணவர்களின் நலன்கருதி பள்ளிவாசல் நிர்வாகிகள் மாணவர்களுக்கான குர்ஆன் வசதிகளைப் பெற்றுத்தருமாறு ரஹ்மத் பவுண்டேசனிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக வை.டபிள்யு.எம்.ஏ பேரவையின் ஒருங்கிணைப்பில் கல்முனை மாநகர முன்னாள் பிரதிமுதல்வரும், முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளரும், கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூரினால் குறித்த 70 மாணவர்களுக்கான புனித அல்-குர்ஆன் பிரதிகள் வழங்கப்பட்டன.

இதன்போது முஹ்யித்தீன் மஸ்ஜிதினுடைய நிர்வாகிகளான தலைவர் ரீ.ஏ.மஜீத், செயலாளர் எம்.எச்.ஏ.கரீம், பொருளாளர் ஏ.எம். நியாஸ், நிர்வாக உறுப்பினரான எம்.இஸ்மாயில் உட்பட பலர் கலந்துகொண்டனர். (அ)

# சம்மாந்துறையில் யானைகளின் தொல்லையை கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை எடுக்கப்படும்

அம்பாறை, நவ. 05

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவிற்குள் காட்டு யானையின் தொல்லையிலிருந்து பொது மக்களையும் அவர்களது உடைமைகளையும் பாதுகாப்பதற்கான விசேட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா தெரிவித்தார்.

அண்மைக்காலமாக சம்மாந்துறை பிரதேசத்தில் காட்டு யானைகளின் தொல்லையால் உயிரிழப்புக்களையும் உடைமை இழப்புக்களையும் மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.

காட்டு யானைகளினால் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டதுடன் பாதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட குடும்பத்தினரையும் அண்மையில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம சந்தித்து கலந்துரையாடினார்.

அதன் பின்னர் காட்டு யானைகளின் தொல்லையிலிருந்து எதிர்காலத்தில் பொதுமக்களையும் உடைமைகளையும் பாதுகாக்க யானை வேலி அமைப்பது சம்பந்தமாக மதிப்பீட்டு அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு தன்னை பணித்துள்ளதாக பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

அந்த வகையில் காட்டு யானைகளின் தொல்லையிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான உரிய பொறிமுறைகளை ஏற்படுத்துவதற்கான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. (அ)

# கட்டுப்பாட்டை இழந்த பொலிஸ் ஜீப் வாகனம்!

மட்டக்களப்பு, நவ. 06

கல்குடா பொலிஸ் நிலையத்திலிருந்து வாழைச்சேனை நோக்கி வேகமாக சென்ற கல்குடா பொலிஸ் நிலைய ஜீப் வண்டி ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

வாழைச்சேனை துறைமுகத்துக்கு முன்னாலுள்ள வீட்டு மதிலை உடைத்துக் கொண்டு வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேன் ஒன்றில் இந்த ஜீப் மோதியுள்ளது.

இவ் விபத்தில் மதில், ஜீப் வண்டி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேன் ஆகியவை சேதமடைந்துள்ளன.

இவ் விபத்தில் ஜீப் வண்டியை செலுத்தி வந்த பொலிஸ் உத்தியோகத்தர் காயங்களுடன் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# கிழக்கு கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தொழிற்சங்கத்துக்கு புதிய நிர்வாகம் தெரிவு

மட்டக்களப்பு, நவ. 06

கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தொழிற்சங்கத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டம் நேற்று முன் தினம் மட்டக்களப்பு பலநோக்கு கூட்டுறவு சங்க கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

சங்கத்தின் தலைவர் பி. நந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த பொதுச்சபைக் கூட்டத்தில் மட்டக்களப்பு, கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, தொழிற்சங்கத்தினால் கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் பற்றிய விடயங்கள் பேசப்பட்டதையடுத்து புதிய நிருவாகத் தேர்வும் இடம்பெற்றது.

இன்றைய கூட்டத்தில் பின்வரும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நிருவாக சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக ஏ.எல்.எம். பாறூக், செயலாளராக பி.ரி. ஆதம்பாவா, பொருளாளராக கே. சசிதரன், உப தலைவராக எஸ். ஜாபீர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். நிருவாக சபை உறுப்பினர்களாக பி. தியாகராஜா, எச்.எம்.கே. ரஹ்மான், ஏ.அமலராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தொழிற்சங்கத்தின் ஆயுட்காலம் 3 வருடங்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# கனடா 2026 ஆம் ஆண்டு முதல் குடியேற்றத்தை அதிகரிக்காது!

**அடுத்த இரு வருடங்களில் எந்த மாற்றமும் இருக்காது**
**பணவீக்கம், வதிவிடமின்மை நாடு நெருக்கடியை நோக்கி**

மொன்றியல், நவ. 06

**உலகெங்கும் இருந்து குறிப்பாக ஆசிய நாடுகளில் இருந்து பெரும் குடியேறிகள் படையெடுப்பைச் சந்தித்துவருகின்ற கனடா, வெளிநாட்டவர்களுக்கு வதிவிடம் வழங்கும் எண்ணிக்கையை எதிர்வரும் 2026 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அதிகரிப்பதில்லை எனத் தீர்மானித்துள்ளது.**

**அதேசமயம் அடுத்த இரண்டு ஆண்டுகளில் அதன் குடியேற்ற இலக்குகளில் எந்த வித மாற்றமும் இருக்காது என்றும் அறிவித்திருக்கிறது.**



ஆளும் லிபரல் - தாராளவாத - அரசின் இந்த அரசியல் தீர்மானத்தை குடியேற்ற அமைச்சர் மார்க் மில்லர் ஒட்டாவாவில் செய்தியாளர் மாநாடு ஒன்றில் வெளியிட்டிருக்கிறார்.

குடியேற்றவாசிகள் மத்தியில் பெரிதும் கவர்ச்சி மிக்க நாடாக விளங்கும் கனடா உள்நாட்டில் பணவீக்கம், வேலை வாய்ப்பின்மை மற்றும் வீட்டு வசதிநெருக்கடி போன்ற பல வித சவால்களை எதிர்கொள்ள ஆரம்பித்துள்ளது. அதன் காரணமாக வெளிநாட்டவர்கள் தொடர்பான அரசியல் இலக்குகளில் வரையறைகளைச் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது.

கனடாவுக்குள் வெளிநாட்டவரை உள்வாங்கும் இலக்கு எண்ணிக்கை 2015 வரை மூன்று லட்சத்துக்கும் குறைவாகவே இருந்து வந்தது. சமீப ஆண்டுகளில் அது படிப்படியாக அதிகரிக்கப்பட்டு வந்தது.

கனடா இந்த ஆண்டு 4 லட்சத்து 65 ஆயிரம் பேருக்கு வதிவிட உரிமைகளை வழங்கத் தீர்மானித்திருந்தது. அடுத்த 2024 இல் அது 4 லட்சத்து 85 ஆயிரமாகவும் 2025 இல் 5 லட்சங்களாகவும் இருக்கும்.

இந்தக் குடியேற்ற இலக்கில் எந்தவித மாற்றங்களும் செய்யப்படமாட்டாது என்பதை அமைச்சர் மார்க் மில்லர் உறுதிப்படுத்தினார். ஆனால் 2026 ஆம் ஆண்டு முதல் குடியேறிகளது வருடாந்த எண்ணிக்கை அளவில் உயர்வு இருக்காது - அதாவது 5லட்சங்களைத் தாண்டி அது மேலும் அதிகரிக்கப்பட மாட்டாது - என்பதே லிபரல் அரசு விடுத்துள்ள செய்தி ஆகும்.

கனடாவுக்குள் வெளிநாட்டவரை உள்வாங்கும் இலக்கு எண்ணிக்கை 2015 வரை மூன்று லட்சத்துக்கும குறைவாகவே இருந்து வந்தது.

"இந்தக் குடியேற்ற வரையறைகள் கனடாவின் பொருளாதாரம் மற்றும் மக்கள்தொகை வளர்ச்சி வேகத்தைச் சீரமைக்க உதவும் அதே வேளையில் உட்கட்டமைப்பு மற்றும் வீட்டுவசதி போன்ற முக்கியமான அமைப்புகளில் தாக்கங்களைக் குறைக்கும்" - என்று அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

இதேசமயத்தில், பொருளாதார வளர்ச்சிக்கும் சனத்தொகை வயதுச் சீரமைப்புக்கும் கனடாவுக்கு மேலும் வெளிநாட்டுக் குடியேறிகள் நீண்ட கால அடிப்படையில் அவசியமாக உள்ளனர் என்று கனடா றோயல் வங்கியின் அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது.

வருடாந்தம் 1.3மூ வீத குடியேற்ற அதிகரிப்பு நாட்டின் சனத்தொகையின் வயதுக் கட்டமைப்பைச் சீராகப் பேணுவதற்குப் போதுமானது அல்ல என்றும் அது 2.1மூ வீதமாக அதிகரிக்கப் படவேண்டும் எனவும் அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

இந்த ஆண்டு ஜூலை மாதம் வரையான 12 மாதங்களில் 2.9% வீதத்தால் அதிகரித்த சனத்தொகை 40 மில்லியன்களைக் கடந்துள்ளது.

கனடாவைப் பொறுத்தவரை அதன் சனத் தொகை அதிகரிப்பு என்பது குடியேறிகளது வருகையினாலேயே நிகழ்கிறது. இவ்வாறு சனத்தொகை அதிகரிப்பது சமீப காலமாக நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மிகப் பெரிய ஏற்றத்தைக் கொடுத்துள்ளது.

மறுபுறத்தில் நாட்டுக்குள் நுகர்வோர் அதிகரிப்பது தேவைகளைக் கூட்டி பொருள்களது விலைகளின் அதிகரிப்பை உருவாக்குகிறது. ஏராளமான தொழிலாளர்களது வருகை ஊதியங்களிலும் வீழ்ச்சியை ஏற்படுத்தி வருகிறது.

அதனால் தான் வெளிநாட்டவர்கள் ஒரு புறம் அங்கு பொருளாதாரத்தின் ஊக்கிகளாகவும் மறுபுறம் பணவீக்கம் போன்ற பிரச்னைகளுக்கான பிரதான காரணியாகவும் கணிக்கப்படுகின்றனர் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

அதேசமயம் பணவீக்கம் அதிகரிப்பு, குடியிருப்பு வசதியின்மை போன்ற விளைவுகளுடன் வெளிநாட்டுக் குடியேறிகளைத் தொடர்புபடுத்தும் விதமான கருத்துக்களை பொருளியல் நிபுணர்கள் வெளியிட்டு வருவது அரசியல் கொள்கைகளில் தாக்கம் செலுத்துகின்றது.

(அ)




# லியோனில் யூதப் பெண் மீது வாள் வெட்டு!

**அவரது வீட்டுக் கதவில் நாஸி சின்னம் பொறிப்பு**

பாரிஸ், நவ. 06

பிரான்ஸின் லியோன் நகரில் இஸ்ரேலியப் பெண் ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்துள்ளார். அவரது வீட்டுக் கதவில் முன்னாள் ஜேர்மனிய நாஸி கட்சியின் சின்னமாகிய சுவாஸ்திகா அடையாளம் பொறிக்கப்பட்டிருக்கிறது.

இஸ்ரேல் - பாலஸ்தீனப் போரைத் தொடர்ந்து பிரான்ஸில் யூதர்கள் மற்றும் இஸ்லாமிய சிறுபான்மையினர் மத்தியில் நிலவி வருகின்ற பெரும் பதற்ற நிலையின் பின்புலத்தில் பதிவாகியிருக்கின்ற முதலாவது தாக்குதல் சம்பவம் இதுவாகும்.

லியோன் நகரின் மூன்றாவது நிர்வாகப் பிரிவில் உள்ள ஒரு குடியிருப்பில் இன்று சனிக்கிழமை பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது. யூத மதத்தைப் பின்பற்றுகின்ற முப்பது வயதுகளையுடைய பெண் ஒருவர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. அவர் வீட்டில் தனித்திருந்த சமயம் கறுப்பு உடை அணிந்த நபர் ஒருவரே இத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார் என்று முதலில் வெளியான தகவல்கள் தெரிவித்தன.

தாக்குதலாளி அங்கிருந்து தப்பிச் செல்வதற்கு முன்னர் வீட்டின் பிரதான வாயிற் கதவில் நாஸிக் கட்சியைக் குறிக்கின்ற சுவாஸ்திகா சின்னத்தைக் கத்தியால் செதுக்கிவிட்டுச் சென்றுள்ளார். அதனால் இது ஒரு யூத எதிர்ப்புவாதத் தாக்குதல் சம்பவம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

அடிவயிற்றில் வெட்டுக் காயங்களுடன் காணப்பட்ட அந்தப் பெண் பின்னர் லியோன் மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்டுள்ளார். அவரது உயிருக்கு ஆபத்து இல்லை என்று கூறப்படுகிறது.

கடந்த மாதம் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது ஹமாஸ் தீவிரவாதிகள் தாக்குதல் தொடுத்த நாள் முதல் பிரான்ஸில் நாடெங்கும் இதுவரை சுமார் 857 யூத எதிர்ப்புவாதச் சம்பவங்கள் பதிவாகி உள்ளன என்றும் அவை தொடர்பாக 447 கைதுகள் நடத்தப்பட்டுள்ளன எனவும் உள்துறை அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. தலைநகர் பாரிஸ் உட்பட பல நகரங்களிலும் வீதிகள், வர்த்தக நிலையங்கள், வீடுகள் என்பவற்றில் யூத எதிர்ப்புவாதச் சின்னங்கள் பொறிக்கப்பட்டு வருகின்றன.

(அ)



# இரு பள்ளிவாசல்கள் மீது இஸ்ரேல் குண்டுதாக்குதல்

டெல் அவிவ், நவ. 06

கடந்த சில மணித்தியாலங்களில் தெற்கு காசா நகரில் இரண்டு பள்ளிவாசல்கள் மீது இஸ்ரேலிய இராணுவம் குண்டுவீசி தாக்குதல் நடத்தியதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த தாக்குதல்களால் அல் -சப்ரா பகுதியில் உள்ள அலி பின் அபி தாலிப் மற்றும் அல் -இஸ்திஜாபா என்ற பள்ளிவாசல்கள் அழிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் காசாவில் பல்வேறு பகுதிகளிலிருந்து முந்தைய வான்வழித் தாக்குதல்களில் இருந்து தப்பி ஓடிய ஆயிரக்கணக்கான மக்கள் தங்கியுள்ள பாடசாலை மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த அகதிகள் முகாம் கடந்த நாட்களில் மூன்று முறை தாக்கப்பட்டுள்ளது என்றும் இந்த புதிய தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் விபரம் இதுவரை வெளியிடப்படவில்லை.

அத்தோடு முற்றுகை நடவடிக்கைக்கு மத்தியில் அனைத்து பகுதிகளுக்கும் மின்சாரம் மற்றும் எரிபொருள் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் சோலர் பொனல்கள் மற்றும் ஜெனரேட்டர்களை குறிவைத்து இஸ்ரேலிய இராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளதாக காசாவில் உள்ள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# நேபாளத்தில் நிலநடுக்கம்!

**உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 150 ஐ கடந்தது**

காத்மண்டு, நவ. 06


நேபாளத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் பலியானோர் எண்ணிக்கை 150-ஐ கடந்துள்ளது.

நேபாளத்தில் நேற்று முன் தினம் இரவு 11.32 மணியளவில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.4 ஆக பதிவானது.

இந்த நிலநடுக்கத்தில் பலியானோர் எண்ணிக்கை தற்போது 150-ஐ கடந்துள்ளது.

மேற்கு நேபாளத்தின் ஜாஜர்கோட் மற்றும் மேற்கு ருகும் மாவட்டங்களில் 100-க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர்.

இதையடுத்து, நேற்று பிற்பகல் மீண்டும் 3.3 அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளமை மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.



தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் பலர் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என்பதால், பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

இது 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நேபாளத்தில் ஏற்பட்ட மிக மோசமான நிலநடுக்கம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# எந்த தேர்தலும் நடத்தாமல் காலத்தை வீணடிப்பதே ஜனாதிபதியின் நோக்கம்!

## சிறிதரன் எம்.பி. குற்றச்சாட்டு

**கிளிநொச்சி, நவ. 06**

**நாட்டில் எந்த தேர்தலையும் நடத்தாமல் காலத்தை வீணடிப்பதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கம் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.**



கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனை கூறினார்.

தேர்தலை ஆராய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தேர்தல் நடத்தப்பட வேண்டுமா போன்ற விடயங்களை மக்கள் மத்தியில் கொண்டு சென்று தேர்தலை பிற்போடும் செயற்பாடுகளையே ஜனாதிபதி முன்னெடுத்துள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்துடன் நாட்டை தனி நபரின் அதிகாரத்திற்குள் வைத்துக் கொள்வதற்கான முயற்சிகளையே முன்னெடுத்துள்ளதாக வும் தற்போது சர்வதிகார ஆட்சியே நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், நாட்டில் தேர்தல் நடத்தப்பட்டு புதிய ஆட்சியாளர்கள் ஆட்சியமைக்க வேண்டும் என்பதையே நாட்டு மக்கள் அனைவரும் எதிர்பார்த்துள்ளதாகவும் சிவஞானம் சிறிதரன் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# ஹெரோயின் ரக போதைப்பொருளை வைத்திருந்த சிறைக்காவலர் கைது!

கொழும்பு, நவ. 06

கண்டி - திகன பேருந்து நிலையத்துக்கு அருகில் ஹெரோயின் ரக போதைப்பொருளை வைத்திருந்த சிறைக்காவலர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

உடுதும்பர சிறைச்சாலையில் கடமையாற்றும் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர் ஒருவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய குறித்த சிறைக்காவலர் கைதானார்.

கைதானவர், இரத்தினபுரி பிரதேசத்தைச் சேர்ந்தவரென தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# விவசாயிகளுக்கு தோட்டாக்களுடன் துப்பாக்கிகள் வழங்கவேண்டியேற்படும்

கொழும்பு, நவ. 06

வன விலங்குகளால் ஏற்படும் பயிர்ச் சேதங்களை தடுப்பதற்காக தோட்டாக்களுடன் கூடிய துப்பாக்கிகளை விவசாயிகளுக்கு வழங்க வேண்டியேற்படுமென விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

வன விலங்குகளால் ஏற்படும் பயிர்ச் சேதங்களால் வருடத்துக்கு 17 முதல் 20 பில்லியன் ரூபாய் வரை இழப்பு ஏற்படுகிறது.

கடந்த வருடம் வன விலங்குகளால் 200 மில்லியனுக்கும் அதிகமான தேங்காய்கள் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார். (அ)



# மன்னாரிலிருந்து கடத்த முற்பட்ட பெருந்தொகை தங்கம் சிக்கியது!

மன்னார், நவ. 06

மன்னார், ஓலைத்தொடுவாயில் கடல் மார்க்கமாக எடுத்துச் செல்ல முற்பட்ட 2 கிலோ 150 கிராம் தங்கத்துடன் சந்தேகநபர்கள் 5 பேர், டிங்கி படகு, முச்சக்கர வண்டிஎன்பன கைப்பற்றப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

வடமத்திய கடற்படை கட்டளைக்கு சொந்தமான கஜபா என்ற இலங்கை கடற்படை கப்பலினால் மன்னார், ஓலைத்தொடுவாய் கடற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இந்த விசேட தேடுதல் நடவடிக்கையில், சந்தேகத்திற்கிடமான வகையில் அந்த கடற்பகுதியில் பயணித்த டிங்கி படகு ஒன்று அவதானிக்கப்பட்டு சோதனையிடப்பட்டது.

டிங்கி படகில் கவனமாக மறைத்து வைக்கப்பட்டு சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டிற்கு கொண்டு செல்ல முயற்சித்த தங்கம், சந்தேகநபர்கள் ஐவரும் அவர்களது வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படையினர் மேலும் தெரிவித்தனர்.

ஓலைத்தொடுவாய் கடற்கரைப் பகுதியை உள்ளடக்கிய மேலதிக சோதனையில், இந்தக் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 28 தொடக்கம் 56 வயதுக்கு இடைப்பட்ட வாங்காலை மற்றும் மன்னார் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்தனர். (அ)

# கிரிக்கெட்டை மீட்க என்ன வழி?

## விளக்குகிறார் சஜித்



கொழும்பு, நவ. 06

“இலங்கை கிரிக்கெட், நிர்வாகத்திலும் விளையாட்டிலும் தனியுரிமை வாதம் இப்போது வெளிப்பட்டுள்ளது. இந்நிலையில் இருந்து மீண்டு வர தனியுரிமை சர்ச்சைகள், வாதங்கள் இல்லாது கிரிக்கெட் மீண்டெழ வேண்டும், இதற்கு நல்ல புரிதல் உள்ள திறமையானவர்களிடம் இந்த பொறுப்பை ஒப்படைத்து, அரசியல் ரீதியிலான தலையீடுகள் இடம்பெறாதிருக்க வேண்டும்.” என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

“சகல விளையாட்டுகளும் அரசியல் தலையீடுகள் இன்றி இருக்க வேண்டும், விளையாட்டு குறித்து நன்கு புரிதல் உள்ளவர்களுக்கு அதன் பொறுப்பைக் ஒப்படைத்து,கிரிக்கெட்டில் நிலவி வரும் தகுதிகளைப் பொருட்படுத்தி அதிகாரம் உடைய பதவிகளுக்கு நியமனம் செய்யும் குரோனிசம் நடைமுறையில் களையப்பட வேண்டும் , தற்சமயம் கிரிக்கெட்டில் உள்ள குரோனிசம் காரணமாக பாடசாலை மற்றும் கழக மட்டத்திலான வீரர்களுக்கு கிடைக்க வேண்டிய உரிய இடம் கிடைக்காது போயுள்ளது, 220 இலட்சம் மக்களுடன் இணைந்த கிரிக்கெட் ஒரு சிலரின் பேராசைக்காக பயன்படுத்தப்பட்டது பெரும் அவலத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில்,சகல விளையாட்டுகளும் அரசியல் தலையீடுகள் தவிர்ந்து ஒழுங்குபடுத்தப்பட்டு, அந்தந்த விளையாட்டு குறித்த அறிவுடன் உலகை வென்ற வீரர்களுக்கு பொறுப்புகள் வழங்கப்படும்.

எந்தவொரு வீரரையும், காப்பாற்றவோ கைவிடவோ அல்லது தூக்கிப் பிடிக்கவோ தட்டிவிடவோ ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் தயாராக இல்லை.” என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார். (அ)

# பழுக்கடை மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் பெண்ணொருவர் பலி

கொழும்பு, நவ. 06

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கண்டி - மஹியங்கனை பிரதான வீதியின் ரம்புக்வெல்ல பகுதியில் உள்ள பழக்கடை ஒன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் பெண்ணொருவர் உயிரிழந்தார்.

குறித்த பழக்கடை மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததையடுத்து அதில் பெண்ணொருவர் சிக்குண்டுள்ளதாக தெல்தெனிய பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் பிரதேச மக்கள் மற்றும் பொலிஸார் இணைந்து குறித்த பெண்ணை மீட்டுள்ளனர்.

பின்னர், சிகிச்சைகளுக்காக அவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

உயிரிழந்தவர் ரம்புக்வெல்ல - தெல்தெனிய பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவர் என பதுடன் சடலம் பிரேத பரிசோதனைக்காக தெல்தெனிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (அ)

# யாழ். வர்த்தகர் வீட்டு அந்தியேட்டியில் அதிகாலையில் நடந்த பெரும் திருட்டு!

யாழ்ப்பாணம், நவ. 06

யாழ்ப்பாணம், இணுவில் பகுதியில் வீட்டிலிருந்த 120 பவுணுக்கும் அதிகமான தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன.

கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, இணுவில், மஞ்சத்தடி, விவேகானந்தா வீதியிலுள்ள வர்த்தகர் ஒருவரின் வீட்டிலேயே நகை திருடப்பட்டுள்ளது.

அந்த வீட்டில் நேற்று குடும்ப உறுப்பினர் ஒருவருடைய அந்தியேட்டிக் கிரியை நடைபெற்றது. இதை முன்னிட்டு, அதிகாலை 3 மணிக்கே வீட்டிலிருந்தவர்கள் எழுந்து, சமையலில் ஈடுபட்டுள்ளனர்.

அதிகாலை 3.20 மணியளவில் வீட்டு அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த நகைகளை காணவில்லையென்பதை குடும்பத்தினர் அவதானித்துள்ளனர்.

திருடப்பட்ட நகைகளின் சரியான அளவு இன்னும் உறுதியாகவில்லை. 120 பவுணுக்கும் அதிகமான நகைகள் திருடப்பட்டுள்ளன என மட்டும் இதுவரை உறுதியாகியுள்ளது. (அ)

# காஸாவில் தங்கியிருந்த 11 இலங்கையர்கள் நேற்றுக் கட்டுநாயக்கவை வந்தடைந்தனர்!

கொழும்பு, நவ. 06

பலஸ்தீனத்தின் காஸா பகுதியில் தங்கியிருந்த 11 இலங்கையர்கள் நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்ததாக விமான நிலையத்துக்குப் பொறுப்பான அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவர்கள் காஸா பகுதியிலிருந்து ரஃபா கேட் வழியாகவும், கெய்ரோ விமான நிலையத்திலிருந்து கத்தார் மற்றும் எகிப்து ஊடாகவே இவர்கள் கட்டுநாயக்க வந்தடைந்தனர்.

கட்டார் எயார்வேஸ் விமானம் ஊடாக டோஹாவிலிருந்து அதிகாலை 2.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். (அ)

## நில ஆக்கிரமிப்பு....

செட்டிகுளத்தில் கீழ்மல்வத்தோயா திட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ள குடியேற்றங்களை தடுத்துநிறுத்து,

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு தீர்வை வழங்கு, இந்து ஆலயங்களை ஆக்கிரமிக்காதே, அவற்றில் விகாரைகளை அமைக்காதே, திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை நிறுத்து, இஸ்ரேல் காஸா மோதலை சர்வதேசம் நிறுத்த வேண்டும்" போன்ற வாசகங்களை தாங்கிய பதாதைகளை ஏந்தியவாறும், கோசங்களை எழுப்பியவாறும் போராட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த ஆர்பாட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா,பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன்,இரா.சாணக்கியன், தமிழரசுக்கட்சியின் செயலாளர் ப.சத்தியலிங்கம், மாவட்ட அமைப்பாளர் ந.கருணாநிதி,மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள், புதிய ஜனநாயக மாக்ஸ்சிக லெனினிச கட்சியின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (அ)

## ஜனவரி

திகதி திருகோணமலையில் நடைபெறும். அதன்போது கட்சித் தலைவர் உட்பட புதிய நிர்வாகிகள் தேர்வுக்கான நியமனங்கள் பற்றி ஆராயப்படும். சுமுகமாகத் தேர்தலின்றி, இணக்கமான தீர்வுகள் ஏற்படுத்த முயற்சிகள், பேச்சுக்கள் அங்கு மேற்கொள்ளப்படும்.

எது, எப்படியாயினும் அடுத்த நாள் 21 ஆம் திகதி கட்சியின் பொதுக்குழு திருகோணமலையில் கூடிக் கட்சியின் புதிய நிர்வாகிகள் தெரிவு மற்றும் தீர்மானங்கள் குறித்து முடிவு எடுக்கும். தெரிவுகளுக்குத் தேர்தல் தவிர்க்க முடியாமல் அமையுமானால் அவையும் அன்று இடம்பெறும்.

அதன் பின்னர் அடுத்த வாரம் ஜனவரி 27ஆம் திகதி கட்சியின் இளைஞர் அணி மற்றும் மகளிர் அணி மாநாடுகள் திருகோணமலையில் நடக்கும்.

அதேசமயம் தேவைப்பட்டால் அன்றைய தினமும் கட்சியின் தற்போதைய பொதுக்குழுவின் அமர்வு ஒன்று திருகோணமலையில் முன்னெடுக்கப்படும்.

தொடர்ந்து கட்சியின் தேசிய மாநாட்டை ஒட்டிய பொது அமர்வு அடுத்த நாள் ஜனவரி 28ஆம் திகதி திருகோணமலையில் கோலாகலமாக இடம்பெறும். இவை இன்று நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டன என அறியவந்தது. (அ)

## நில அபகரிப்பு....

தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மயிலத்தமடுவில் தமிழ்ப் பண்ணையாளர்களின் மேய்ச்சல் தரையில் சிங்களக் குடியேற்றம் ஏற்படுத்தப்படுகின்றது. இதுபோலவே வடக்கு, கிழக்கில் சிங்கள - பௌத்த மயமாக்கல் செயற்பாடுகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த 70 வருடங்களாகத் தமிழ் மக்கள் இனத்தின் விடுதலைக்காக மட்டுமல்ல, தங்கள் தாயக நிலம் பௌத்த, சிங்கள மயமாக்கலுக்கு எதிராகவும் போராடி வந்திருக்கின்றனர்.

எனவே, எமது நிலத்தை விடுவிப்பதற்கும் அதனை ஆக்கிரமிப்பதற்கு எதிராகவும் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம்.

எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள எமது கட்சியின் மாநாட்டிலும் நாங்கள் இன விடுதலைக்காகவும், நில விடுதலைக்காகவும் ஜனநாயக வழியிலான போராட்டங்களை முன்னெடுப்பதற்கான திட்டங்கள் தொடர்பாக ஆராய்ந்து, அதன் பின்னர் தொடர்ச்சி யான போராட்டங்களை முன்னெடுப்பதற்குத் தீர்மானித்துள்ளோம். - என்றார். (அ)

## அரச....

வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் அமைச்சரவைக்கு அறிவித்திருந்தார்.

ஆனால் தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் சம்பளத்தை அதிகரிக்க முடியாது எனவும், சம்பளத்தை அதிகரிக்க வேண்டுமாயின் வரி அல்லது அரச சொத்துக்களை விற்று சம்பாதிக்க வேண்டும் எனவும் அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன பல சந்தர்ப்பங்களில் தெரிவித்திருந்தார்.

15 இலட்சம் அரச ஊழியர்களுக்கு 10,000 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்க, வருடத்திற்கு 180 பில்லியன் ரூபா மேலதிகமாக செலவிடப்பட வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## கைதான....

முடிந்து திரும்பும் நிலையில், பல்கலைக் கழக மாணவர்களின் பேருந்து சந்திவெளியில் பொலிசாரால் இடைமறிக்கப்பட்டு, மாணவர்களிடத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து, யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் 5 பேரும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் மட்டக்களப்பு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட போது, மாணவர்களை பிணையில் விடுவித்து உத்தரவிடப்பட்டது.

பிணையாளிகளின் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவகரின் ஆவணத்தை நேற்று மாலை 6 மணிக்குள் பெற்றுக்கொள்ள முடியாததையடுத்து, மாணவர்கள் மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இன்று காலை அவர்கள் முறைப்படி விடுவிக்கப்படுவர். (அ)

## வடக்கு....

தெரிவித்த அவர், இலங்கை மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற சீனா அரசாங்கம் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத் துள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் சீனா அரசாங்கம் 155 மில்லியன் ரூபாயை வடக்கு மாகாணத்திற்கு ஒதுக்கியுள்ளது என்றும் அதில் நிவாரணப் பொதிகள் வழங்குவது மட்டுமன்றி மீன்பிடி வலைகள் பெறுவதற்கும் பயன்படுத்துவதாகவும் மிகுதிப் பணத்தில் வடமாகாணத்தில் வீடு அமைக்க திட்டமிட்டுள்ளதாகவும் இலங்கைக்கான சீனத்தூதுவர் ஷீ சென் ஹொங் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான சீன தூதுவர் ஷீ சென் ஹொங் தலைமையிலான குழுவினர் வவுனியாவுககு நேற்று விஜயமொன்றினை முன்னெடுத்தனர்.

வவுனியா மாவட்ட செயலகத்திற்கு வருகை தந்த சீன தூதுவர் தலைமையிலான குழுவினரை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் வரவேற்றதுடன், அவருடைய தலைமையில் சீன அரசாங்கத்தால் வடக்கு மக்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது சீனத் தூதுவர், சீன அரசாங்கத்தின் வவுனியா மாவட்டத்திற்கான நிவாரண உதவித் திட்டத்தை வழங்கி ஆரம்பித்து வைத்தார்.

வவுனியா மாவட்டத்தின் வவுனியா, வவுனியா தெற்கு உள்ளடங்களாக 4 பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 500 குடும்பங்களுக்கு சீனாவால் 7500 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் முதல் கட்டமாக வழங்கப்பட்டன.

சீன பௌத்த விகாரைகள் மற்றும் பௌத்த மக்களால் வழங்கப்படும் குறித்த உலர் உணவுப் பொருட்களை சீனா - இலங்கை பௌத்த நட்புறவுத் திட்டத்தின் கீழ் சீன தூதுவர் உத்தியோக பூர்வமாக வழங்கி வைத்தார்.(அ)

## ஜனாதிபதி

பட்டுள்ளது.

அந்தவகையில் பொது வேட்பாளர் விடயத்துக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றின் ஆதரவைக் கோருவது எனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஐந்து தமிழ்க் கட்சிகளை உள்ளடக்கிய ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் நேறறு முற்பகல் 10.30 மணியளவில் மன்னாரில் அமைந்துள்ள ரெலோவின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

ரெலோ கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் ஆரம்பமான இந்தக் கூட்டத்தில் ரெலோ சார்பாக அக்கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா), கட்சியின் ஊடகப் பேச்சாளர் குருசாமி சுரேன், ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சி சார்பாக கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், கட்சியின் பொதுச்செயலாளரான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், கட்சியின் உப தலைவர் இரா.துரைரரெட்ணம், புளொட் கட்சி சார்பாக கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், கட்சியின் பொதுச்செயலாளர் ஆர்.ராகவன், தமிழ்த் தேசியக் கட்சியின் சார்பாக கட்சியின் தலைவர் சட்டத்தரணி என். சிறிகாந்தா மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சி சார்பாக கட்சியின் தலைவர் சிவநாதன் வேந்தன், கட்சியின் பேச்சாளர் கணேசலிங்கம் துளசி, கட்சியின் கிழக்கு மாகாணப் பொறுப்பாளர் நாகலிங்கம் நகுலேஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் கூட்டணியைப் பலப்படுத்தல், சமகால அரசியல் பிரச்னைகள், ஜனாதிபதி பொது வேட்பாளர், மயிலத்தமடு பண்ணையாளர்கள் பிரச்னை, மன்னாரில் காணிகள் அபகரிப்பு, மீன் இறக்குமதி விவகாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகள் தொடர்பில் ஆராயப்பட்டன என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். (அ)

## சித்தாண்டியில்...

சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள், உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பண்ணையாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து, நேற்று காலை 9 மணிக்கு சித்தாண்டி முருகன் ஆலயத்துக்கு முன்னால் ஒன்றுகூடியதை அடுத்து, அந்த மாணவர்கள் ஆர்ப்பாட்ட பேரணியாக போராட்டம் நடத்தும் பண்ணையாளர்களின் இடம் வரை சென்று, அங்கேயும் ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்துள்ளனர்.

இதனையடுத்து, அந்த பகுதியில் கலகம் அடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டு, பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டம் முடிவுற்ற பின்னர், மாணவர்கள் பேருந்தில் கிழக்கு பல்கலைக்கழகத்தை நோக்கி பயணித்த போது, பேருந்தை பின்தொடர்ந்து சென்ற சந்திவெளி பொலிஸார் பல்கலைக்கழகத்துக்கு அருகாமையில் வைத்து பேருந்தை நிறுத்தி, அதிலிருந்த 6 மாணவர்களை கைது செய்துள்ளனர்.

அந்த 6 மாணவர்களும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்கள் சட்ட விரோதமாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை, பொது வீதிப் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)







ஈழநாடு
Eelanadu

# பட்ஜெட்டில் பொருட்களின் விலைகள் குறைக்கப்படும்!

## மஹிந்தானந்த எம்.பி தகவல்

கொழும்பு, நவ. 06

2024ஆம் நிதி ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் ஐந்து அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் பல பொருட்களின் விலைகளைக் குறைக்குமாறு பொதுஜன பெரமுன ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக முன்னாள் அமைச்சரும் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

பல அரச நிறுவனங்களை ஒன்றிணைத்து நாவலப்பிட்டி நகரில் ஏற்பாடு செய்யப்பட்ட ரன்மினி தியவர கலாசார கலை விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்திருந்த போதிலும், அரச உத்தியோகத்தர்கள் சிலர் ஏனைய அரசியல் கட்சிகளின் விருப்பத்திற்கு அமைய சம்பள அதிகரிப்பை கோரி போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களில் பெரும்பாலானோர் பட்டதாரிகள். அந்த பட்டதாரிகள் பல வருடங்களாக வேலையில்லாமல் இருந்த போது பொதுஜன பெரமுன அரசாங்கம் அவர்களுக்கு அரசாங்க வேலைகளை வழங்கியது.

போராட்டம் நடத்துவதற்கு மக்களுக்கு உரிமை இருந்தாலும், அரசியல் ஆதாயத்திற்காக மட்டுமே போராட்டம் நடத்தப்பட வேண்டுமே தவிர உண்மையான உரிமைகளைப் பெற அல்ல.

எதிர்ப்புகளுக்கு அஞ்சினால் அரசாங்கத்தை நடத்த முடியாது. இந்த வருட வரவு - செலவுத்திட்டத்தின் பின்னர் அடுத்த வருடத்தை நாட்டு மக்களுக்கு நிவாரண ஆண்டாக மாற்றுவதே தமது அரசாங்கத்தின் நோக்கமாகும்.

எரிபொருள் விலை அதிகரிப்பினால் நாட்டில் எரிபொருள் பாவனை குறைந்துள்ளது. மின் கட்டண அதிகரிப்பால் மின்சார பாவனையும் குறைந்துள்ளது." என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# பிரதமருடன் பல விடயங்களை கலந்துரையாடினார் சந்திரகுமார்!



கொழும்பு, நவ. 06

வடக்கில் நிலவுகின்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுடன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு.சந்திரகுமார் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

நேற்று கொழும்பிலுள்ள அவரது அலுவலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

இதன் போது வடக்கில் வனவளதிணைக்களத்தினால் கையக்கபடுத்தப்படுத்தப்பட்டுள்ள பொது மக்களின் காணி மற்றும் விவசாய நிலங்கள், வடக்கில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற குடிநீர் விநியோக திட்டங்களின் போது ஏற்படுகின்ற தடைகள், உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான வீதிகளை விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் புனரமைக்க வேண்டிய தேவைகள், பொதுநிர்வாக உள்நாட்டலுவலர்கள் அமைச்சின் கீழ் நிலவுகின்ற வளப் பிரச்சினைகள் என்பன பிரதமரின் கவனத்திற்கு சந்திரகுமார் அவர்களினால் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

விடயங்களை கேட்டறிந்துகொண்ட பிரதமர் சில விடயங்கள் தொடர்பில் உடனடியாக கவனம் செலுத்துவதாகவும், ஏனைய விடயங்களில் எதிர் காலத்தில் கவனம் எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார். (அ)

# ஜனநாயக ரீதியில் போராடிய மாணவர் மீது கட்டவிழ்க்கப்பட்ட பொலிஸாரின் அத்துமீறல்

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டனம்

யாழ்ப்பாணம், நவ. 06

**ஜனநாயக ரீதியில் போராட்டத்தை முன்னெடுத்த மாணவர்கள் மீது கட்டவிழ்க்கப்பட்ட பொலிசாரின் அத்துமீறல் செயற்பாட்டை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட கண்டன அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டன அறிக்கையில்,மட்டக்களப்பு - மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரைகள் மீதான சிங்கள குடியேற்ற ஆக்கிரமிப்பையும், தொடர்ந்து இடம்பெறும் கால்நடைகளின் உயிர் கொலைகளை கண்டித்தும் பாதிக்கப்பட்ட பண்ணையாளர்களுக்கு ஆதரவு தெரிவித்தும் மட்டக்களப்புக்கு சென்ற எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

50 ஆவது நாளாக தொடரும் பண்ணையாளர்களின் போராட்ட களத்தில் யாழ் பல்கலைக்கழக மாணவர்களுடன் கிழக்குப் பல்கலைக்க மாணவர்களும் ஒன்றிணைந்து இந்த ஆதரவுப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டம் முடிந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் வீதியில், பல்கலைக்கழக மாணவர்களின் பேருந்தை மறித்த பொலிசார், மாணவர்களின் விவரங்களை கோரி அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டுள்ளனர். பின்னர் மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தி 6 மாணவர்களை வலுக்கட்டாயமாக கைது செய்து இழுத்துச் சென்றுள்ளனர்.

ஜனநாயக ரீதியில் போராட்டத்தை முன்னெடுத்த மாணவர்கள் மீது கட்டவிழ்க்கப்பட்ட பொலிசாரின் இந்த அத்துமீறல் செயற்பாட்டை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது.

தமிழர்கள் மீது இனவாதத்தை கக்கும் பிக்குவின் செயறபாடுகளுக்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்க முன்வராத பொலிசார், பாதிக்கப்பட்ட பண்ணையாளர்களுக்கு ஆதரவு தெரிவித்த மாணவர்கள் மீது வன்மத்தை காட்டியுள்ளனர்.

தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இனவாதத்தை எதிர்க்கும் இளம் சமுதாயத்தை பயமுறுத்தி அடக்கி ஒடுக்கும் செயற்பாடாகவே நாம் இதைப் பார்க்கிறோம்.

கைதுசெய்யப்பட்ட மாணவர்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என்பதுடன் ஜனநாயக ரீதியான போராட்டங்களுக்கு தடை போடும் பொலிசாரின் அராஜகத்தை மீண்டும் கண்டிக்கிறோம் - என்றுள்ளது. (அ)

# குருநகர் கடற்பரப்பில் சட்டவிரோதமாக கடலட்டை பிடித்த நான்கு பேர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 06

யாழ்ப்பாணம் - குருநகர் கடல் பகுதியில் அனுமதியின்றி சட்டவிரோதமாக கடலட்டை பிடித்த நால்வர் நேறறு ஞாயிற்றுக்கிழமை காலை கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் கடலட்டை பிடித்துக் கொண்டிருந்தவேளை, மண்டைதீவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதோடு, அவர்களது படகு ஒன்றும் பறிமுதல் செய்யப்பட்டது.

கைதான நால்வரும் காங்கேசன் துறை கடற்படை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

கைதான நான்கு பேரும் யாழ்ப்பாணத்தில் உள்ள நீரியல்வள திணைக்களத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட பின்னர், நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# நாட்டை நாசம் செய்துவிட்டு ஓடியுள்ளது ராஜபக்ஷ குடும்பம்!

## சாடுகின்றார் மைத்திரிபால



கொழும்பு, நவ. 06

பாதியிலே நாட்டை நாசம் செய்து விட்டு ஒடிவிட்டார்கள் ராஜபக்ஷ குடும்பம் வரிச்சுமையை மக்கள் மீது சுமத்தி இன்று அவதியுற்று உள்ளார்கள் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சுதந்திர கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட கட்சி பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் மட்டக்களப்பிலுள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றபோது அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் வருடம் தேர்தல் காலம். ஆகவே மக்களுக்காக சேவை செய்கின்ற உண்மையாக உழைக்க கூடிய மக்கள் பிரதிநிதியை உருவாக்க வேண்டும்.

கடந்த எனது ஆட்சி காலத்தின் போது விலைவாசி உயரவில்லை நாட்டு மக்கள் நிம்மதியாக வாழ்த்தார்கள். என்னை பிழையானவராக காட்டி ஆட்சிக்கு வந்தவர்கள் பாதியிலே நாட்டை நாசம் செய்து விட்டு ஒடிவிட்டார்கள் ராஜபக்ஷ குடும்பம், வரிச்சுமையை மக்கள் மீது சுமத்தி இன்று அவதியுற்று உள்ளார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு மூன்று மாதத்திற்கு ஒரு முறை வருகிறேன் கட்சி நடமுறைகளை அவதானிப்பதற்கும், கட்சியை மறுசீரமைப்பு செய்து நாட்டை கட்டியெழுப்ப பாடுபடுவோம்-என்றார். (அ)

# தாவடி இளைஞரின் சடலம் நேற்று வெள்ளவத்தையில் கரையொதுங்கியது!

கொழும்பு, நவ. 06

யாழ்ப்பாணம் தாவடியை பிறப்பிடமாகக் கொண்ட இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று காலை கொழும்பு வெள்ளவத்தை கடற்கரையில் ஒதுங்கியுள்ளதாக கொழும்பிலிருந்து கிடைத் தகவல்கள் தெரிவித்தன.

தாவடி, யாழ்ப்பாணம் என்ற முகவரியைக் கொண்ட 28 வயதுடைய சர்வானந்தா கிருஷாந் என்பவரின் சடலமே கரையொதுங்கியுள்ளது.

உயிரிழப்புக்கான காரணம் குறித்த தகவல்கள் வெளியாகவில்லை. (அ)

# மலையக ரயில் சேவைகள் பாதிப்பு

கொழும்பு, நவ.06

மலையக புகையிரத வீதியில் தலவாக்கலை மற்றும் வட்டகொட புகையிரத நிலையங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் புகையிரத வீதியில் நேற்று பிற்பகல் மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளதாக நாவலப்பிட்டி புகையிரத கட்டுப்பாட்டு அலுவலகம் தெரிவித்துள்ளது.

கனமழை காரணமாக மண் மேடு சரிந்துள்ளதாகவும், புகையிரத தண்டவாளத்தில் விழுந்துள்ள மண் மேடுகளை அகற்றி புகையிரத வீதியை சீரமைத்து உடனடியாக புகையிரதங்கள் இயக்கப்படும் எனவும் கட்டுப்பாட்டு அறை தெரிவித்துள்ளது. மண்மேடு விழுந்துள்ள காரணமாக புகையிரத சேவை தடைப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.11.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# நியூசிலாந்தை வெற்றிகொண்டது பாகிஸ்தான்

உலகக் கிண்ணத் தொடரின் பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான நேற்று முன் தினம் நடந்த 35ஆவது லீக் ஆட்டத்தில் டக்வொர்த் லூவிஸ் முறைப்படி 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்தை பாகிஸ்தான் அணி வெற்றிகொண்டுள்ளது.

உலகக் கிண்ணத் தொடரின் 35ஆவது லீக் ஆட்டம் பெங்களூரில் நடைபெற்றது.

பாகிஸ்தான் மற்றும் நியூசிலாந்து அணிகள் இந்த போட்டியில் மோதின.

இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் பந்துவீச்சை தெரிவுசெய்தது.

அதன் பிரகாரம் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட நியூசிலாந்து அணி ஆரம்பம் முதலே வானவேடிக்கையை நிகழ்த்தியது.

வீசப்பட்ட பெரும்பான்மையான பந்துகள் எல்லைக் கோட்டை கடந்து ஆறு ஓட்டங்களாகவும், நான்கு ஓட்டங்களாகவும் பதிவாகின.

ஆரம்பம் முதலே அதிரடி காட்டிய நியூசிலாந்து அணி சார்பில் முதலில் களமிறங்கிய டெவோன் கான்வே மற்றும் ரச்சின் ரவீந்திர ஜோடி முதல் விக்கெட்டுக்காக 68 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்துகொண்டது.

35 ஓட்டங்களுடன் டெவோன் கான்வே அசன் அலியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து செல்ல தொடர்ந்த ஆடுகளத்தில் ரச்சின் ரவீந்திர ஆக்ரோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

இரண்டாவது விக்கெட்டுக்காக களமிறங்கிய கேன் வில்லியன்சனும் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

ரச்சின் ரவீந்திர மற்றும் கேன் வில்லியன்சன் ஜோடி இரண்டாவது விக்கெட்டுக்காக 228 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்துக்கொண்டது. ரச்சின் ரவீந்திர 108 ஓட்டங்களையும் கேன் வில்லியன்சன் 95 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

இவர்களது விக்கெட்டுகளை அடுத்தடுத்து வீழ்த்தப்பட, அடுத்துக்களமிறங்கிய வீரர்களான,

டேரில் மிட்செல் - 29
மார்க் சாப்மேன் - 39
க்ளென் பிலிப்ஸ் - 41
மிட்செல் சான்ட்னர் - 26

என்ற அடிப்படையில் ஓட்டங்களை பெற்றுக்கொடுக்க இறுதியில் நியூசிலாந்து அணி 6 விக்கெட்டுகளை இழந்து 401 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பந்துவீச்சில் மொஹமட் வசீம் 3 விக்கெட்டுகளையும் ஷஹீன் ஷா அப்ரிடி, ஹசன் அலி, இப்திகார் அகமது ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீதம் கைப்பற்றினர்.

பாகிஸ்தான் அணி 402 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது. பாக். அணி 6 ஓட்டங்களை பெற்றிருந்த வேளையில், அப்துல்லா ஷபீக் 4 ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்பினார்.

ஆனால், இரண்டாவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த ஃபகார் சமான் மற்றும் அணியின் தலைவர் பாபர் அசாம் ஆகியோர் ஆரம்பம் முதலே அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

போட்டியின் இடை நடுவில் இரண்டுமுறை மழை குறுகிக்கிட்டது. இதனால், போட்டி டக்வொர்த் லூவிஸ் முறைக்கு செல்லும் என எதிர்பார்க்கப்பட்டது.

மழை விடாததால் பாகிஸ்தான் அணி 25.3 ஓவர்களில் 200 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்திருந்ததால் டக்வொர்த் லூவிஸ் முறைப்படி பாகிஸ்தான் அணி 21 ஓட்டங்களால் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

களத்தில் இருந்த பாபர் அசாம் 66 ஓட்டங்களையும் ஃபகார் சமான் 126 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி புள்ளிப் பட்டியலில் 5ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

நியூசிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு தலா ஒரு போட்டிகள் எஞ்சியுள்ளன. இதில் வெற்றி பெறும் அணிக்கே அரையிறுதி வாய்ப்பு கிடைக்கும் சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது.



# நோவக் ஜோகோவிச் அரையிறுதிக்கு தகுதி

2022 ஆம் ஆண்டு சம்பியன் பட்டம் வென்ற ஹோல்கர் ரூனை வீழ்த்தி, பாரீஸ் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரின் அரையிறுதி போட்டிக்கு நோவக் ஜோகோவிச் தகுதி பெற்றுள்ளார்.

நேற்று முன் தினம் நடைபெற்ற போட்டியில் 7- 5 என முதல் செட்டை நோவக் ஜோகோவிச் கைப்பற்ற டை பிரேக் வரை நீடித்த இரண்டாவது செட்டை 7 - 6 என ஹோல்கர் ரூன் கைப்பற்றினார்.

இதனை அடுத்து வெற்றியை தீர்மானிக்கும் இறுதி செட்டில் 6- 4 என வீழ்த்தி நோவக் ஜோகோவிச் அரையிறுதி சுற்றுக்கு தகுதி பெற்றார்.

கடந்த ஆண்டு பாரிஸ் மாஸ்டர்ஸ் இறுதிப் போட்டியில் ஏற்பட்ட தோல்விக்குப் பழிவாங்கும் வகையில் நோவக் ஜோகோவிச் இப்போட்டியில் சிறப்பாக விளையாடியிருந்தார்.

இதனை தொடர்ந்து இடம்பெறவுள்ள அரையிறுதி போட்டியில் செர்பிய வீரரான நோவக் ஜோகோவிச், ரஷ்ய வீரரான ஆண்ட்ரே ரூப்லெவ்வை எதிர்கொள்ளவுள்ளார்.

# இலங்கை ரக்பி மீதான தடை நீக்கம்



ஆசிய ரக்பி சம்மேளனத்தின் தலைவர் கைஸ் அல் தலாய் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று முன் தினம் காலை டுபாயில் நடைபெற்றுள்ளது.

இதன்போது உலக ரக்பி சம்மேளனத்தின் இலங்கை ரக்பிக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டதாக ஆசிய ரக்பி சம்மேளனத்தின் தலைவர் பெரிஸில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இந்த முடிவு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்றும் ஆசிய ரக்பி சம்மேளனத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

# மொஹான் டி சில்வா இராஜினாமா




இலங்கை கிரிக்கெட் சபையின் செயலாளர் மொஹான் டி சில்வா தனது இராஜினாமா கடிதத்தை கையளித்துள்ளார்.

இலங்கை அணியின் தொடர் தோல்விகளைக் கருத்தில் கொண்டு இலங்கை கிரிக்கெட் சபை மற்றும் அதிகாரிகள் மீது பல தரப்பில் இருந்தும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

தற்போது இடம்பெற்றுவரும் உலகக் கிண்ண தொடரில் இந்தியாவுக்கு எதிரான போட்டியில் இலங்கை அணி அடைந்த பாரிய தோல்வியுடன் இலங்கை கிரிக்கெட் சபை மேலும் விமர்சிக்கப்பட்டது.

இந்நிலையில் இந்தப் பிரச்சனையில் தலையிட்ட விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவும், அதிகாரிகள் பதவி விலகாவிட்டால், கடுமையான முடிவுகளை எடுக்கப்போவதாக அறிவித்திருந்தார்.

இந்நிலையில் இலங்கை கிரிக்கெட் சபையின் செயலாளர் பதவியில் இருந்து மொஹான் டி சில்வா இராஜினாமா செய்துள்ளார்.



# ஹர்திக் பாண்டியா வெளியேற்றம்

ஐசிசி உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் இருந்து இந்திய அணியின் ஹர்திக் பாண்டியா வெளியேறியுள்ளார்.

உபாதை காரணமாக அவர் வெளியேறியுள்ளதாக அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் ஹர்திக் பாண்டியாவிற்கு மாற்று வீரராக பிரதிஸ் கிருஷ்ணா அணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளார்.

# இலங்கை ஏன் இப்படி மோசமாக தோற்கிறது?

## விசாரணை நடத்தப்படுமாம்!

இலங்கை கிரிக்கெட் அணியின் அவமானகரமான தோல்வி குறித்து விசாரணை நடத்த கிரிக்கெட் நிறுவனம் முடிவு செய்துள்ளது.

நிறைவடைந்த உலகக்கிண்ண ஒருநாள் கிரிக்கட் தொடரின் 33ஆவது போட்டியில் இலங்கை அணி மோசமாக தோல்வியடைந்திருந்தது. இலங்கை அணியின் ஆட்டத்தரம், உலகக்கிண்ணம் போன்ற மிகப்பெரிய தொடர்களை குறைமதிப்புக்குள்ளாக்குவதாக பரவலாக விமர்சனங்கள் எழுந்திருந்தன.

இந்திய அணிக்கு எதிராக அண்மைய இரண்டு போட்டிகளில் பாடசாலை அணிகளை விட மிகக்குறைந்த ஆட்டத்திறனை வெளிப்படுத்தி, இந்த ஆண்டில் 4 முறை 100 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்துள்ளது. ஆசிய கிண்ண இறுதிப் போட்டியில் இந்தியாவுக்கு எதிராக 50 ஓட்டங்களிலும், கடந்த 2ஆம் திகதி வெறும் 55 ஓட்டங்களுக்கும் ஆட்டமிழந்தது.

இலங்கை அணிக்கு ஏற்பட்ட தோல்வி குறித்து பயிற்சியாளர்கள் மற்றும் தேர்வுக் குழுவிடம் விசாரிக்க இலங்கை கிரிக்கெட் முடிவு செய்துள்ளது.

# இஸ்ரேல் - அமைதி தோன்றுமா?

கோதை ஜோதிலட்சுமி

உலகம் முழுவதும் ஒரு மெல்லிய பதற்றம் நிலவுகிறது. இஸ்ரேல், ஹமாஸ் அமைப்புடன் காஸா பகுதியில் நிகழ்த்தும் யுத்தம் விரிவடைந்து பெரும் யுத்தமாக மாறுவதற்கான சாத்தியங்கள் தென்படுகின்றன. ஹமாஸ் பக்கம் இஸ்லாமிய நாடுகள் அணிவகுக்கின்றன. இஸ்ரேல் எதற்கும் செவிசாய்க்காது தன்னுடைய முடிவில் தெளிவாக நின்று யுத்தத்தை நகர்த்துகிறது.

யுத்தத்தில் இஸ்ரேல் வெற்றி பெறுமா? ஹமாஸ் காணாமல் போகுமா? உலக நாடுகளின் பதற்றம் தணியுமா? கொள்ளை நோய் தொற்றுக்குப் பின் மீண்டு வரும் உலகப் பொருளாதாரம் மீண்டும் சிக்கலில் ஆழும் அபாயம் தோன்றுமா? உலகப் போராக இந்தப் போர் விரிவடையாமல் தடுக்கும் சக்தி வல்லரசுகளுக்கு உண்டா? அல்லது வல்லரசுகள் முன்னின்று யுத்தத்தை நடத்துவார்களா? இஸ்ரேலில் அமைதி தோன்றுமா?

இஸ்ரேல் என்ற தேசம் இரண்டாம் உலகப்போருக்குப் பின் 1948-இல் தோன்றிய பின்னர் அதன் வரலாற்றில் அமைதி என்பதற்கு இடமில்லை. தேசம் உருவான அதே நாளில் போருக்குத் தயாரானது என்பதுதான் வரலாறு. இறைவனே அவர்களை வழிநடத்திக் கொண்டு வந்து சேர்த்த பூமி இஸ்ரேல் என்று விவிலியம் சொல்கிறது. அன்றிலிருந்து இன்று வரை யூதர்களான இஸ்ரேலியர்கள் தங்கள் தாய்நிலத்திற்காக உரிமைப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

இறைவனால் ஆசிர்வதிக்கப்பட்டவர்கள் இஸ்ரவேலர்களான யூதர்கள். அதே நேரத்தில் இறை சாபமும் அவர்களுக்கு ஒரு காலகட்டத்தில் கிடைத்தது. இதனாலோ என்னவோ யூதர்களான இஸ்ரேலியர்கள் மிகக்கடுமையான சிக்கல்களை, இழப்புகளைச் சந்தித்துள்ளனர். இன்றைக்கும் இந்த தேசத்திற்காகப் பாடுபடுகின்றனர்.

இஸ்ரேலியர்களைப் போல அழகானவர்கள் இந்த உலகில் வேறு யாருமில்லை. அவர்களுக்கு நிகரான மதிநுட்பம் கொண்டவர்களும் எவரும் கிடையாது என்கிறது விவிலியத்தின் ஏற்பாடு.

இஸ்ரேலிய தேசமும் அதன் வரலாறும் விவிலியம் பழைய ஏற்பாட்டில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. தொல்லியல் சான்றின்படி, எகிப்திய நினைவுச் சின்னமாகிய 'மெனெப்தா' நடுகல்லில் உள்ள ஒரு குறிப்பில் இசுரேல் என்ற சொல் இடம்பெற்றுள்ளது. 10 அடி உயரம் கொண்ட இந்த நினைவுக்கல் கி.மு. 1211-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது என்று கணித்துள்ளனர்.

அதாவது, 3,000 ஆண்டுகளுக்கும் மேலாக யூதர்கள் 'இஸ்ரேல்' என்னும் நிலத்தைத் தங்கள் தாயகமாக, புனித நிலமாகக் கருதி வந்துள்ளனர். இஸ்ரேல் என்ற தேசம்



முற்றிலும் அழிக்கப்படுவதும் மீண்டும் இஸ்ரேலியர்கள் அதனை நிர்மாணிப்பதும் வரலாற்றில் பலமுறை நிகழ்ந்துள்ளது.

இன்றைய இஸ்ரேல் பகுதிகளில் 1880-களில் யூதர்கள் தங்கள் தாய்நிலம் இதுவென அப்பகுதிகளில் குடியேறினர். அரேபியர்களிடமிருந்து விலை கொடுத்து நிலங்களை ஒரே பகுதியில் யூதர்கள் வாங்கி தங்கள் மக்கள் கூடி வாழும் பகுதியாக அதனை அமைத்துக் கொண்டனர். இதனால் பாலஸ்தீன இஸ்லாமியர்களுக்கும் யூதர்களுக்கும் தொடர்ந்து பூசல்கள் இருந்து வந்தன.

1920 முதல் 1945 வரை ஐரோப்பாவிலும் குறிப்பாக, ஹிட்லர் காலத்தில் ஜெர்மனியிலும் யூதர்களுக்கு நடந்த கொடுமைகளின் காரணமாக பெருந்துயரத்தை அனுபவித்தனர். ஜெர்மானிய சர்வாதிகாரி அடால்ஃப் ஹிட்லர் யூதர்களைப் படுகொலை செய்தார். இரண்டாம் உலகப் போரின் போது ஆஷ்விட்ச் உள்ளிட்ட இனப்படுகொலைகளில் இருந்து தப்பிக்க யூதர்கள் அங்கிருந்து வெளியேறி தங்கள் தாய்நிலமான இஸ்ரேல் பகுதிக்கு வந்தனர். இதனால், அங்கே யூதர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருந்தது.

இந்தியாவைப் போலவே இரண்டாம் உலகப்போருக்கு முன் பாலஸ்தீனமும் பிரிட்டிஷ் காலனியாதிக்கத்துக்கு உட்பட்டிருந்தது. பாலஸ்தீனத்தில் அரேபியர்கள் பெரும்பான்மையினராகவும், யூதர்கள் சிறுபான்மையினராகவும் இருந்தனர். பிரிட்டிஷ் அரசு அரேபியர்கள் மற்றும் யூதர்களுக்கு இடையில் தொடர்ந்து கொண்டிருந்த பூசல்களைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறியது.

இரண்டாம் உலகப்போரில் யூதர்கள் அடைந்த துன்பம், அவர்களின் அறிவியல் கண்டுபிடிப்புகளின் பங்களிப்பு என காலச்சூழல் இஸ்ரேல் என்ற தேசம் உருவாக வாய்ப்பளித்தது. பிரிட்டிஷ் காலனியாதிக்கத்திலிருந்து பாலஸ்தீனம் விடுதலை அடையும்போது இஸ்ரேல், பாலஸ்தீனம் என இரு நாடுகளாகப் பிரிக்கப்பட்டது. அப்போது, ஐநா சபை, நாடுகளின் பிரிவை அங்கீகரித்து இஸ்ரேல் என்ற தனி நாடு உருவானது.

தங்கள் நிலத்தை இஸ்ரேலியர்கள் ஆக்கிரமித்துக் கொண்டதாக பாலஸ்தீன இஸ்லாமியர்கள் கொதிப்படைந்தனர். இறைவனால் தங்களுக்கு ஆசிர்வதிக்கப்பட்ட பூமி என இஸ்ரேலியர்கள் அதன் மீது பற்றுக் கொண்டுள்ளனர்.



இந்த இரு தரப்புக்கும் இடையே இன்றும் தொடரும் உரிமைப்போர் பல உயிர்களைக் குடித்துள்ளது. இஸ்ரேல் என்ற தேசம் 1948-ஆம் ஆண்டு மே 15-ஆம் நாள் உருவானது. அடுத்த தினமே இஸ்ரேலைச் சுற்றியுள்ள அரபு நாடுகள் அதனுடன் போருக்கு வந்தன. இந்தப் போர் 1949ஆம் ஆண்டு வரை நீடித்தது.

போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டபோது இந்தப் பகுதியின் பெரும்பாலான இடங்களை இஸ்ரேல் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. மேற்கு கரை பகுதியை ஜோர்டான் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்தது. எகிப்து ஆக்கிரமித்த பகுதிதான் காஸா. ஜெருசலேமும் இரண்டாகப் பிரிந்தது. மேற்கு ஜெருசலேமை இஸ்ரேலும், கிழக்கு ஜெருசலேமை ஜோர்டானும் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தன.

1967-இல் நடந்த ஆறுநாள் போரில் ஜோர்டான், எகிப்தின் பல பகுதிகளையும் லெபனானின் சில பகுதிகளையும் இஸ்ரேல் கைப்பற்றிக்கொண்டது. போர் முடிவுக்கு வர ஜோர்டான் மற்றும் எகிப்துடன் சமாதான உடன்படிக்கைகளையும் மேற்கொண்டது. இன்றளவும் இந்தப் பகை நீடித்து வருகிறது.

இஸ்ரேல் மிகச் சிறிய தேசம். 8019 சதுர மைல் பரப்பளவு மட்டுமே கொண்டது. என்றாலும் இந்த உலகில் யூதர்களுக்கான ஒரே தேசம். அதன் நிலவியல் அமைப்பு மேற்கு மற்றும் தெற்கில் கடல் எல்லையும் வடக்கில் லெபனான், வடகிழக்கில் சிரியா, கிழக்கில் ஜோர்டான், தென்மேற்கில் எகிப்து மற்றும் காஸா என சுற்றிலும் அவர்களுடன் விரோதம் பாராட்டும் தேசங்களுக்கு நடுவே அமைந்துள்ளது. கடந்த 75 ஆண்டுகளாகப் போரும் பூசலும் இஸ்ரேலின் வாடிக்கையாக இருந்து வருகிறது.

அறிவாற்றலால் சிறந்த நிர்வாகம், ராணுவம், உளவுத்துறை எனத் தன்னை ஸ்திரப்படுத்திக் கொண்டுள்ள இஸ்ரேல், தற்போது ஹமாஸ் என்ற தீவிரவாத அமைப்பின் தொடர் தாக்குதலுக்கு உள்ளாகிய நிலையில் அந்த அமைப்பை முற்றிலும் அழிக்கும் நோக்குடன் போரிட்டு வருகிறது. 1987-இல் உருவான ஹமாஸ் தீவிரவாத அமைப்பு இஸ்ரேலை அழித்துவிட்டு இஸ்லாமிய அரசை நிறுவுவதே தங்களது நோக்கம் எனக் கூறுகிறது. உண்மையில் ஹமாஸ் அமைப்பை அப்படி இல்லாமல் செய்துவிடுவது சாத்தியமா?

சாத்தியமில்லை என்று அறிஞர்கள் பலரும் கருத்துத் தெரிவிகின்றனர். என்றாலும் ஹமாஸ் அமைப்பு செயல்பட முடியாத அளவுக்கு அதைத் தற்போதைக்கு ஒடுக்குதல் சாத்தியம் என்ற கருத்தும் இருக்கிறது. ஹமாஸ் அமைப்புக்கு ஆதரவு தரும் பலம் பொருந்திய நாடுகளும் இருப்பதால் இந்தப் போர் இப்போதைக்கு முடிவுக்கு வராமல் நீடிக்கலாம். அதோடு, போர் முதல் முறை நிகழ்வதும் இல்லை. இது ஹமாஸுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே நிகழும் நான்காவது போர்.

இஸ்ரேலுக்கு ஆதரவு தரும் நாடுகளும் ஒருபுறம் இருக்கின்றன என்றாலும் இஸ்ரேல் எப்படி நடந்து கொள்ள வேண்டும், இந்தப் போரை அவர்கள் எப்படி நடத்த வேண்டும் என்ற கருத்துடையவையாக இருக்கின்றன. மருத்துவமனை மீது தாக்குதல் நடத்திவிட்டது இஸ்ரேல் என்று அதைக் கண்டிக்கும் ஐநாவின் சொற்களை இஸ்ரேல் கண்டுகொள்ளவில்லை. இஸ்ரேல் தன் இலக்கை நோக்கி மட்டுமே கவனம் செலுத்துகிறது.

இஸ்ரேலின் கடும் பாதுகாப்பு அமைப்பைத் தாண்டி, கடந்த அக்டோபர் 7-ஆம் தேதி கொடூரமான தாக்குதல்களை நடத்திய ஹமாஸ் அமைப்பு ஒரே நாளில் ஆயிரக் கணக்கான ராக்கெட்டுகளை வீசி இஸ்ரேல் நாட்டையே நிலைகுலையச் செய்து நூற்றுக்கணக்கானோரை பிணைக் கைதிகளாகவும் பிடித்துச் சென்றுள்ளது.

அறிவாற்றலால் உலகுக்குப் பெரும் கண்டுபிடிப்புகளைத் தந்த இனம், இன்றைக்கும் பல உலகப் பெரும் பொறுப்புகளில் இருக்கும் இனம். அமெரிக்காவில் கருப்பர், வெள்ளையர் என்ற இரு இனங்களுக்கு இடையே மூன்றாவதாக யூதர்கள் தங்களுக்கென தனித்த அடையாளத்தைக் கொண்டே இன்றும் வாழ்கின்றனர். அமெரிக்காவின் அரசுப் பொறுப்பின் உயர்நிலைகளில் இவர்கள் கோலோச்சுகின்றனர்.

யூதர்களுக்கு எண்ணிக்கை பலம் இல்லாமல் இருக்கலாம். ஆனால், இன்றைய உலகில் 90 வீத அறிவியல் கண்டுபிடிப்புகளுக்குப் பின்னாலும் அவர்களது மூளை தான் இருக்கிறது. அது ஆல்பர்ட் ஐன்ஸ்டீனானாலும் சரி, ஹென்றி கிசிஞ்சரானாலும் சரி, யூதர்களை அகற்றி நிறுத்தினால் உலக வரலாறு என்பது அசாத்தியம். அணுகுண்டில் தொடங்கி, அடுப்பாங்கறை வரை அவர்களது முத்திரை காணப்படுகிறது என்பதை நாம் மறந்துவிடலாகாது.

போர் பிரகடனம் செய்து இஸ்ரேல் ராணுவம் ஹமாஸ் அமைப்புடன் சண்டையிடுகிறது. போர் நாளுக்கு நாள் தீவிரமாகிக் கொண்டு வருகிறது. இந்தப் போரின் முடிவு எப்படி வேண்டுமானாலும் அமையலாம். தற்போதைக்கு ஹமாஸ் பின்வாங்கலாம். அதற்கான முயற்சியாக ஹமாஸ் அமைப்பு பிணைக் கைதிகளை விடுதலை செய்யத் தற்போது முன்வந்துள்ளதைக் கூறலாம். என்றாலும், இஸ்ரேல் என்ற தேசம் அமைதியும் நிம்மதியும் காண வழி ஏற்பட்டுள்ளதாகக் கூற முடியாது. ●



# மாலத்தீவின் ஆட்சி மாற்றம்!

மனீஷ் திவாரி

## மாலத்தீவுகளில் பெருகிவரும் மத அடிப்படைவாதமும், இஸ்லாமிய தீவிரப் போக்கும்!

மாலத்தீவில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம், இந்தியாவைப் பொருத்தவரை எதிர்பாராதது மட்டுமல்ல, மிகவும் துரதிர்ஷ்டவசமானது. இந்திய எதிர்ப்பு அரசியல்வாதியும், சீன ஆதரவாளராகக் கருதப்படுபவருமான டாக்டர் முகமது மூயிஸ் அங்கு நடைபெற்ற தேர்தலில் பெருவாரியான வாக்குகளைப் பெற்று, அதிபராகப் பொறுப் பேற்கவுள்ளார்.



இனம், மொழி, கலாசாரம், வர்த்தகம் எனப் பல வழிகளில் இந்தியாவுக்கும் மாலத்தீவுகளுக்கும் நெருங்கிய உறவு உண்டு. மாலத்தீவு என்ற பெயரே 'மாலத்வீபம்' என்ற சம்ஸ்கிருதச் சொல்லின் திரிபுதான். தீவுகளின் மாலை என்று இதற்குப் பொருள். மாலத்தீவின் அதிகாரபூர்வ மொழியான 'திவெயி', சம்ஸ்கிருதம், பிராகிருதம், தமிழ் ஆகிய இந்திய மொழிகளின் தாக்கம் கொண்டது.


ஆங்கிலேய காலனி ஆதிக்கத்திலிருந்து 1965 ஜூலை 26-இல் மாலத்தீவுகள் விடுதலை பெற்றபோது, அந்தத் தீவுக் கூட்டத்தை சுதந்திர நாடாக அங்கீகரித்த முதல் நாடு இந்தியாதான். 1981-இல் இரு நாடுகளிடையே உருவான விரிவான வர்த்தக ஒப்பந்தம், 40 ஆண்டுகளுக்கும் மேலாக இரு நாடுகளின் வர்த்தக நலன்களை மேம்படுத்தியதுடன், இரு தரப்பு உறவையும் வலுப்படுத்தியிருக்கிறது.

2004-இல் சுனாமி தாக்குதலின்போது, மாலத்தீவுகளுக்கு நிவாரணப் பொருள்களை அனுப்பிய முதல் நாடு இந்தியா. கோவிட் தொற்றின்போது, 'வாக்ஸின் மைத்ரி' திட்டத்தில் தடுப்பூசிகளை இந்தியாவிடமிருந்து பெற்ற முதல் நாடும் மாலத்தீவுகள்தான். அந்த அளவுக்கு அந்நாடு இந்தியாவின் மிக நெருங்கிய நட்பு நாடாகவே இருந்து வந்திருக்கிறது.

1988-இல் மாலத்தீவுகளின் அதிபரான மாமூன் அப்துல் கயூமுக்கு எதிராக ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி நடைபெற்றபோது 'கற்றாழை நடவடிக்கை' என்ற பெயரில் இந்திய ராணுவம் அங்கு 1988 நவ. 3-இல் களமிறங்கியது. அந்த அதிரடி நடவடிக்கையால்தான் அந்நாட்டின் ஜனநாயகம் அப்போது காக்கப்பட்டது. அதுமட்டுமல்ல, ஆட்சிக் கவிழ்ப்பில் ஈடுபட்ட அப்துல்லா லுதுஃபி தலைமையிலான கும்பலும், இலங்கையிலிருந்து வருவிக்கப்பட்ட கூலிப்படையினரும் முடக்கப்பட்டனர்.

முகமது மூயிஸின் தற்போதைய வெற்றி, இந்தியா - மாலத்தீவுகள் ஆகிய இரு நாடுகளிடையிலான நல்லுறவைத் தகர்ப்பதாக அமைந்து விடுமோ என்ற அச்சம் எழுந்திருக்கிறது. அவரது சீன ஆதரவு ரகசியமானதல்ல. முகமது மூயிஸின் இந்திய எதிர்ப்புக் கொள்கைகள், இந்தியப் பெருங்கடலில் இந்தியாவின் செல்வாக்கிற்கு சவாலையும், புவிசார் அரசியலில் தேவையற்ற சிக்கலையும் ஏற்படுத்துவனவாக உள்ளன. இது நமது வியூகங்களை மறுபரிசீலனை செய்தாக வேண்டிய தேவையை ஏற்படுத்தியிருக்கிறது.

2010-இல் மாலத்தீவுகளுக்கு கண்காணிப்பு ஹெலிகாப்டர்களை இந்தியா வழங்கியபோது இந்திய எதிர்ப்புப் பிரசாரம் அங்கு தொடங்கியது. மாலத்தீவுகளின் இறையாண்மையில் இந்தியா அத்துமீறித் தலையிடுவதாகவும், அளவுக்கு மீறி இந்தியா மேலாதிக்கம் செலுத்துவதாகவும் அப்துல்லா யாமீன் குற்றஞ்சாட்டினார். அவர் அதிபராக ஆனபோது இரு நாட்டு உறவு சீர்குலையத் தொடங்கியது. அவரது அரசில் (2013- 2018) அமைச்சராக இருந்த முகமது மூயிஸ்தான் தற்போது அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். வரும் நவ. 17-இல் பொறுப்பேற்க உள்ளார்.



2012-இல் இந்தியாவைச் சேர்ந்த ஜிஎம்ஆர் குழுமம், மாலே சர்வதேச விமான நிலையத்தை மேம்படுத்தி 25 ஆண்டுகளுக்குப் பராமரிக்கும் ஒப்பந்தத்தைப் பெற்றபோது, அதற்கு எதிரான அரசியல் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. 511 மில்லியன் டாலர் (தற்போதைய இந்திய மதிப்பில் ரூ. 4,250 கோடி) மதிப்புள்ள அந்தப் பணி, சர்வதேச விதிமுறைப்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஜிஎம்ஆர் நிறுவனத்தால் பெறப்பட்டது.

ஆனால், விமானப் பயணிகளிடம் விமான நிலைய மேம்பாட்டுக்காகவும் பயணிகளின் காப்பீட்டுக்காகவும் 25 டாலர் கட்டணமாகப் பெறப்பட்டதை பெரிய குற்றமாகப் பிரசாரம் செய்து, நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து தடையாணை பெற்றனர். அந்த வழக்கு சர்வதேச தீர்ப்பாயத்தில் இருக்கும்போதே ஜிஎம்ஆருடனான பணி ஒப்பந்தத்தை ரத்து செய்தது அந்நாட்டு அரசு.

2013-இல் அப்துல்லா யாமீன் அதிபரானதும், இந்தியாவுக்கு எதிரான வெறுப்புணர்வுப் பிரசாரம் வரிசை கட்டியது. இஸ்லாமிய மத அடிப்படைவாத உணர்வையும், மாலத்தீவு தேசிய வெறியையும் தூண்டிவிட்டு, இந்தியாவுக்கு எதிரான சிந்தனைய்யைப் பெரிதுபடுத்தினார் யாமீன். அப்போது, சீனாவின் ஆதிக்கம் அங்கு பரவத் தொடங்கியது.

2018-இல் இப்ராஹிம் முகமது சோலி அதிபரானவுடன், இந்தியாவுக்கு விரோதமான கொள்கைகளை மாற்றி அமைத்தார். முந்தைய அரசின் தவறுகளை அவர் சரிப்படுத்தினார். மாலத்தீவுகளின் நலனில் மீண்டும் இந்தியாவுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டது. இரு நாடுகளிடையிலான பொருளாதார, ராணுவ ஒத்துழைப்பு வலுப்பெற்றது. தவிர, இந்தியப் பெருங்கடலில் சீனாவின் ஆதிக்கம் பெருகுவதைத் தடுப்பதிலும் மாலத்தீவுகள் அரசின் இந்த மாற்றம் உதவிகரமாக இருந்தது.

ஆனால், இதற்கு எதிராக உள்நாட்டு அரசியலில் மீண்டும் இந்திய எதிர்ப்பு தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது. அந்நாட்டின் மக்கள் தேசியக் கட்சி (தற்போது அதிபராகத் தேர்வாகியுள்ள முகமது மூயிஸின் கட்சி), மாலத்தீவுகள் முற்போக்குக் கட்சி ஆகியவை இணைந்து உருவாக்கிய எதிர்க்கட்சிகளின் கூட்டணி 'இந்தியாவே வெளியேறு' என்ற பிரசார இயக்கத்தை தொடர்ந்து நடத்தியது.

அந்தப் பிரசார இயக்கத்தின் நோக்கம், மாலத்தீவுகளில் பணி அமர்த்தப்பட்டுள்ள இந்திய ராணுவத்தை வெளியேற்றுவதுதான். இதில் வேடிக்கை என்னவென்றால், அந்நாட்டிலுள்ள இந்திய ராணுவ வீரர்களின் எண்ணிக்கை 75 மட்டுமே. மாலத்தீவுகளுக்கு இந்தியா பரிசாக வழங்கிய டோர்னியர் விமானத்தையும் இரு கண்காணிப்பு ஹெலிகாப்டர்களையும் இயக்குவதில் மாலத்தீவு ராணுவத்திற்கு உதவவே அவர்கள் அங்கு உள்ளனர்.

மாலத்தீவுகள் நாட்டின் மக்கள் பழைமைவாதிகள். அந்த நாட்டின் அரசாங்க மதமாக இஸ்லாம் உள்ளது. எனவே, இந்தியாவிலிருந்து வெளிவரும், ஹிந்துக்களுக்கு ஆதரவான, இஸ்லாமியர்களுக்கு எதிரான செய்திகளை அந்நாட்டு எதிர்க்கட்சிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டன. மக்களை இந்திய எதிர்ப்பின் அடிப்படையில் மத ரீதியாகத் தூண்டிவிட்டதால் மட்டுமே எதிர்க்கட்சிகள் தற்போதைய தேர்தலில் வென்றுள்ளன.

ஆசியாவையும் ஐரோப்பாவையும் கடல்வழியில் இணைக்கும் கடல் வர்த்தகப் பாதை (எஸ்எல்ஓசி) இந்தியாவுக்கு மிகவும் முக்கியமானதாகும். தென்சீனக் கடலிலிருந்து இந்தியப் பெருங்கடலின் வடபகுதி மீது சீன கடற்படையின் செல்வாக்கு பரவுவதைத் தடுக்கும் தாங்குதளமாக மாலத்தீவுகள் இருந்து வந்தது. எனவே, இந்தியாவுக்கு அந்நாடு ராணுவ வியூக ரீதியாகவும், கடல் வர்த்தகப் பாதையிலும் இன்றியமையாதது.

ஏற்கெனவே, பாகிஸ்தானின் குவாதரிலும், இலங்கையின் அம்பாந்தோட்டையிலும் துறைமுகங்களை நிர்மாணித்தல் என்ற பெயரில் சீனா ஊடுருவி விட்டது. மாலத்தீவுகளிலும் சீன ஆதரவு அரசு அமைவது அந்நாட்டின் ராணுவ ஆதிக்கம் இந்தியாவைச் சுற்றிலும் பெருக வாய்ப்பளித்துவிடும். இது இந்திய பாதுகாப்பு எல்லைக்கு உட்பட்ட பகுதியில் எதிரிகள் நுழையக் கூடாது என்ற மன்றோ அயலுறவுக் கோட்பாட்டை கேள்விக்குறியாக்கிவிடும். (மன்றோ கோட்பாடு என்பது ஐரோப்பாவுக்குக் கடிவாளமிடும் வகையிலான, அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையில் முக்கியமான கருதுகோளாகும்).

தான் அதிபரானால், ஊழல் வழக்கில் 11 ஆண்டு தண்டனை பெற்று சிறையிலிருக்கும் அப்துல்லா யாமீனை விடுவிப்பேன் என்று முகமது மூயிஸ் தேர்தலின்போது அறிவித்திருந்தார். அதுபோலவே, தேர்தல் வெற்றி குறித்த தகவல் கிடைத்தவுடன், தற்போதைய அதிபர் முகமது சோலியை வலியுறுத்தி, அப்துல்லா யாமீனை சிறையிலிருந்து விடுவித்திருக்கிறார். யமீன் தற்போது சிறைக்குப் பதிலாக வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

சன்னி இஸ்லாமியர்களிடையே பிரபலமான சீர்திருத்தவாத இயக்கமான சலாபியிஸம் மாலத்தீவுகளில் மிகுந்த செல்வாக்கு செலுத்தி வருகிறது. இது இஸ்லாமிய அடிப்படைவாத இயக்கமாகக் கருதப்படுகிறது. இந்தியாவில் பெருவாரியாகப் பின்பற்றப்படும் தாராளமயமான தேவ்பந்தி இஸ்லாமுடனும், இந்திய துணைக்கண்டத்தில் தனித்துவமான இஸ்லாம் நெறிமுறைகளை வடிவமைத்த சூஃபியிஸத்துடனும் முரணான பார்வையைக் கொண்டிருக்கிறது சலாபியிஸம். இதனை தீவிரமாகப் பின்பற்றுபவர்தான் முகமது மூயிஸ்.

இவை அனைத்தையும்விட கவலைக்குரியது, மாலத்தீவுகளில் பெருகிவரும் மத அடிப்படைவாதமும், இஸ்லாமிய தீவிரப் போக்கும்தான். அல்-காய்தா, ஐஎஸ்ஐஎஸ் ஆகிய பயங்கரவாத அமைப்புகளுக்கு பிற நாடுகளிலிருந்து போராளிகளை அதிக அளவில் அனுப்பிய நாடாக மாலத்தீவுகள் மாறியுள்ளது.

எனவே, வரும் நாள்களில் மாலத்தீவுகள் விஷயத்தில் இந்தியா நிதானமாகவும் சிந்தித்தும் செயல்பட வேண்டியிருக்கும். அண்டை நாடான மாலத்தீவுகளில் பெருகிவரும் மத அடிப்படைவாதம் நிச்சயமாக இந்தியாவுக்கு நல்லதல்ல. எனவே, மாலத்தீவுகளுடனான நமது வியூகங்களை ஆழ்ந்து மறுபரிசீலனை செய்தாக வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்.

**(கட்டுரையாளர்: இந்தியாவின் முன்னாள் மத்திய அமைச்சர்)**